பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 21 செவ்வாய்க்கிழமை (04-06-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:191

# வடக்கு ஆழ்கடலில் மீன்பிடிக்க சீனாவுக்கு இலங்கை அனுமதி!

## நிலைமைகளை ஆராய குழு நாளை வருகிறது

கொழும்பு,ஜூன்4

**வடக்குக் கடலில் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு சீனாவுக்கு இலங்கை அரசு அனுமதி அளித்துள்ளது. இது தொடர்பான நிலைமைகளை நேரில் பார்வையிட்டு ஆராயவென சீன அரசின் தூதுக் குழு ஒன்று நாளை யாழ்ப்பாணம் வரவிருக்கின்றது.**

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்து 90 நாள் பூர்த்தியானதும் வடக்கு - கிழக்குக் கடலில் சுதந்திரமான மீன்பிடித்தலுக்கு அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், கட்டுப்பாடுகள் தொடர்வதாக மீன்பிடிச் சங்கங்கள் முறையிட்டுள்ளன.

இந்நிலையில் வடக்குக் கடலில் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபட சீனாவுக்கு அரசு அனுமதி வழங்கி

(12ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப தடை நீக்கமெல்லாம் வெளிநாட்டுக் காரருக்குத்தான் என்று சொல்லுங்கோ...

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜூன்4

பொ.ஐ.முன்னணியின் ஏற்பாட்டில் நாளைமறுதினம் வியாழக்கிழமை கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் வன்செயல்கள், மோசடிகள் இடம்பெற்றதாகத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

பொ.ஐ.முன்னணியின் பிரமுகர்கள் மற்றும் கட்சி அங்கத்தவர்கள் ஆகியோரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (ம-4-12)

## தாய்லாந்தில் பேச்சு நடக்க அந்நாடு இடமளிக்கக்கூடாது

### மகாசங்க சம்மேளனம் கோரிக்கை

கொழும்பு,ஜூன்4

தமது ஆயுதக் கடத்தல் தளமாக தாய்லாந்தை விடுதலைப் புலிகள் நீண்டகாலமாகப் பயன்படுத்துவதால் அங்கு சமாதானப் பேச்சு நடக்க இடமளிக்கக்கூடாது.

- இப்படித் தாய்லாந்து அரசை கோரவிருக்கின்றது தேசிய மகாசங்க சம்மேளனம்.

இந்த அமைப்பின் செயலாளர் அத்தரனிய ரதன்ன தேரர் இதைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் தாய்லாந்தைத் தமது ஆயுதத் தளமாக மிக நீண்டகாலமாகப் பயன்படுத்திவருகின்றனர். அங்கு விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் தடை செய்யப்படுதல் வேண்டும்.

மேலும் விடுதலைப் புலிகள் தாய்

(12ஆம் பக்கம் பார்க்க)

### மீன்பிடிக் கட்டுப்பாடுகளை எதிர்த்து

## யாழ். செயலகம் முன்பாக வியாழன் முதல் மறியற்போர்!

### கடற்றொழிலாளர் சமாச ஏற்பாட்டில் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜூன்4

குடாநாட்டு மீனவர்கள் எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றிச் சுதந்திரமாகத் தொழில் செய்ய அனுமதிக்கப்படவேண்டும் என்று கோரி எதிர்வரும் வியாழக்கிழமை முதல் யாழ். செயலகம் முன் தொடர் மறியற்போராட்டம் நடத்தப்படவுள்ளது.

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எஸ்.நவரத்தினம் அத்தகவலை வெளியிட்டார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 90 நாள்கள் சென்ற பின்னர் மீனவர்கள் கடலில் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் -

ஆனால், பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட நிலையிலேயே தற்போதும் மீனவர்கள் - அச்சத்துடன் - தொழிலை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் சொன்னார்.

கட்டுப்பாடுகள் எவையும் இன்றி சுதந்திரமாக மீன்பிடித் தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கோரி யாழ். செயலகம் முன்பாகத் தொடர்மறியற் போராட்டத்தை மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம் என்றும் அவர் கூறினார்.

முதலில் யாழ். செயலகம் முன்பாக இந்தப் போராட்டத்தை நடத்துவது

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்குழு விரைவில் மீண்டும் வன்னி சென்று முக்கிய பேச்சு

கொழும்பு,ஜூன்4

அரச பிரதிநிதிகள் குழு ஒன்று அடுத்த சில தினங்களில் மீண்டும் வன்னிக்குச் செல்லவிருக்கிறது. அரசு - புலிகள் நேரடிப் பேச்சுக்கள் தொடர்பான முக்கிய விடயங்கள் குறித்து அரசுக்குழு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் ஆராயும் - என்று தெரிகிறது.

அரச பிரதிநிதிகள் குழு வன்னிக்குச் செல்லவிருப்பது இராஜந்திர வட்டாரங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யுத்தம் ஆரம்பமானதற்கான காரணங்களும், வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படுவது பற்றியும் தாய்லாந்து பேச்சுக்களில் ஆராயப்படவேண்டும் என்று யோசனை கூறப்பட்டிருக்கின்றது.

இந்த இரண்டு விடயங்கள் குறித்தும் அரசாங்கக் குழுவினர் வன்னியில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் ஆராய்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தாய்லாந்துப் பேச்சுக்கான நிகழ்ச்சி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் எழுச்சி நாள் குடாநாட்டில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்4

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் யாழ். மாவட்டத்தில் அனைத்துக் கல்வி வலயங்களிலும் எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை எழுச்சி பூர்வமாகக் கொண்டாடப்படவுள்ளது.

யாழ். வலயத்தில், யாழ்.மத்திய கல்லூரியிலும் -

வடமராட்சி வலயத்தில், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் -

வலிகாமம் வலயத்தில், தமிழீழ போராட்ட வரலாற்றின் முதல் மாவீரன் பொன்.சிவகுமாரன் நினைவாலயம், மானிப்பாய் இந்துக் கல்லூரி, வட்டு. இந்துக் கல்லூரி ஆகிய இடங்களிலும் -

விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தீவகம், தென்மராட்சி வலயங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தடை நீக்கம் குறித்து அமைச்சரின் கருத்து

கொழும்பு,ஜூன்4

நேரடிப் பேச்சுக்கான திகதியை நிர்ணயிக்க முன்னர் புலிகள் மீதான தடையை நீக்குவது ஒரு தற்கொலை முயற்சிக்கு ஒப்பான விடயமாகும்.

- இப்படிக் கூறுகின்றார் பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞானத் தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னரே விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பான தீர்க்கமான முடிவு வெளியாகும் என்றும் அவர் சொன்னார். (ம-3-12)

## தனிமையில் இருந்த வயோதிபர் சித்திரவதை செய்யப்பட்டு கொலை!

### சங்கரத்தையில் கொடூரம்

வட்டுக்கோட்டை,ஜூன்4

சங்கரத்தைப் பகுதியில் வீட்டில் தனித்து வாழ்ந்துவந்த 75வயது வயோதிபர் ஒருவர் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

ஏழு பிள்ளைகளின் தந்தையான பலூன் வேலுப்பிள்ளை என அழைக்கப்படும் மையப்பு வெலிங்சிங் என்ற வயோதிபரே கொலை செய்யப்பட்டவராவார்.

வீட்டில் தனிமையில் இருந்த சமயம் வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் சிலர் அவரை சித்திரவதை செய்த பின்னர் அவர் அணிந்திருந்த சாரத்தால் அவரின் வாயை மூடி கழுத்தை நெரித்துக் கொலை செய்திருக்கலாம் என்றும் -

கைகள் வயரினால் கட்டப்பட்டிருந்தன என்றும் - விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டது.

பதில் நீதிவான் எம்.திருநாவுக்கரசு நேற்று மாலை சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை நேரடியாகப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊனமுற்ற படையினர் சங்கம் தமிழ்ச்செல்வனை சந்தித்து பேச்சு

கிளிநொச்சி,ஜூன்4

தெற்கில் இருந்து நல்லெண்ணத் தூதுக்குழுவினர் வன்னி வருவதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள சந்தேகங்களைப் போக்க வழி ஏற்படும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

வன்னிக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஊனமடைந்த முன்னாள் படையினரின் சங்கப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இப்படிக் கூறினார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில் சங்கத்தின் தலைவர் தயாரத்ன பெரேரா, செயலாளர் ஜெயசேகரா, மாத்தறை பிரதேச அமைப்பாளர் கமகே ஆகியோர் பங்குபற்றினர்.

புலிகள் சார்பில் தமிழ்ச்செல்வனு

(12ஆம் பக்கம் பார்க்க)

## 'எக்ஸ்போ' விமான சேவை நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்4

இரத்மலானைக்கும் பலாலிக்கும் இடையிலான 'எக்ஸ்போ ஏவியேசன்' நிறுவனத்தின் விமான சேவை நேற்று ஆரம்பமானது.

கொழும்பில் இருந்து 90 பயணிகளுடன் வந்த விமானம் இங்கிருந்து 25பயணிகளுடனேயே திரும்பிச் சென்றது. (ம-3-173)

## யாழ். நிலைமைகளை நேரில் ஆராய்ந்தது உலகவங்கிக் குழு

யாழ்ப்பாணம்,ஜூன்4

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த உலக வங்கித் தூதுக்குழு பல்வேறு இடங்களுக்குச் சென்று நிலைமைகளை நேரில் ஆராய்ந்தது.

உலக வங்கியின் தென்னாசியப் பிரதேச உதவித் தலைவர் திருமதி மியக்கோ நியூமிஷா தலைமையிலான இக்குழு பலாலியில் படை அதிகாரிகளுடன் கூட்டம் ஒன்றை நடத்தியது. அதன் பின்னர் காங்கேசன் துறை துறைமுகம், கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றுக்குச் சென்றது.

கல்விக் கல்லூரியில் உலக வங்கியின் உதவியுடன் அமைக்கப்பட்டுவரும் கட்டடத்தை குழுவினர் பார்வையிட்டனர். அங்கு கல்விக் கல்லூரியில் பீடாதிபதி தலைமையில் நடந்த கூட்டத்திலும் குழுவினர் பங்குபற்றினர்.

இக்கூட்டத்தில் யாழ்மாவட்ட மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம்,

(12ஆம் பக்கம் பார்க்க)

**மீன்பிடிக் கட்டுப்பாடுகள் தொடர்பான**

# கடற்படைத் தளபதியின் கூற்றுக்கு யாழ். படைத் தலைமையகம் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜூன்4

'மனிதாபிமான அடிப்படையிலேயே மீன்பிடிக் கட்டுப்பாடுகள் தளர்வு - தேவையேற்படின் மீண்டும் அமுல் செய்வோம்' என்ற தலைப்பில் கடந்த 29.05.2002 'உதயன்' முன்பக்கத்தில் வெளியான செய்தி குறித்தும் -

31.05.2002 உதயனில் 'படையினரின் வீறாப்பு' என்ற தலைப்பிட்டு வரையப்பட்ட ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பாகவும் -

பலாலியில் உள்ள பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்தில் செயற்படும் தகவல் பிரிவு, விளக்கக் குறிப்பு ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1) நாம் நினைத்தால் மீனவர்களை அறவே கடலில் இறங்கவிடாது தடுத்து நிறுத்தமுடியும் - என்று கடந்த சில தினங்களுக்கு முன் வடபகுதி கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் எஸ்.பீ.வீரசேகர தெரிவித்தார் என்றும் -

அவருடைய அந்த மனப்பான்மை தான் இராணுவ மற்றும் பொலீஸ், முப்படையினரிடமும் காணப்படுகின்றது. படையினர் சர்வாதிகாரம் உடையவர்கள் என்ற நினைப்பில் தான்தோன்றித்தனமாக நடப்பதற்கு அரசாங்க நடவடிக்கைகள் உந்துசக்தியாக விளங்குகின்றன என்றும் 2002.05.31 ஆம் திகதி தங்களது பத்திரிகையில் ஆசிரியர் தலையங்கத்தில் 'படையினரின் வீறாப்பு' என்ற தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

2) வடபகுதி கடற்படைத் தளபதி மேற்குறிப்பிடப்பட்டுள்ள வகையில் கருத்து வெளியிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதில் எவ்வித உண்மையும் இல்லை. தங்களது செய்தி உண்மைக்கு மாறானது என்று தெரிவித்துக்கொள்கின்றேன். 'அரசாங்கமும் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கமையவே வடக்கு - கிழக்கு பகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்க முடியும்' என்றே அவர் தெரிவித்துள்ளார்.

3) அதனால் தங்களது பத்திரிகையின் ஆசிரியர் குறிப்பின் மூன்றாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகவலைத் திருத்தி பிரசுரிக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-3)

## திறந்த பல்கலை மாணவருக்கு!

இளவாலை,ஜூன்4

திறந்த பல்கலைக்கழகத்தின் எந்திரவியல் மாணவர்கள் எதிர்வரும் 10ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் பயிற்சி வகுப்பில பங்குபற்றவிருக்கின்றனர்.

இதில் பங்குபற்றவிருக்கும் மாணவர்களை நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்துக்கு வருமாறு பிராந்திய இயக்குநர் கேட்டுள்ளார். (ம-48)

## தீ மூட்டி எரிந்த பெண் மரணம்!

தமக்குத்தாமே தீ மூட்டி எரிந்ததாகத் தெரிவித்து கடந்த முதலாம் திகதி யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இரு பெண்களில் ஒருவர் அன்றைய தினம் இரவு உயிரிழந்தார்.

புங்குடுதீவைச் சேர்ந்த அம்பலவாணர் புவனேஸ்வரி (வயது42) என்ற பெண்ணே மரணமானவராவார். (ம-15)

## பரிசளிப்பு விழா

அச்சுவேலி,ஜூன்4

வடமராட்சி கல்வி வலயமும், ஒளி நிறுவனமும் இணைந்து பாடசாலை மாணவர் மட்டத்தில் நடத்திய சர்வதேச தினங்களை நினைவூட்டும் போட்டிகளின் பரிசளிப்புவிழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோலி வடஇந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஒளி நிறுவனத்தின் தலைவர் சுஸ்ரெனிஸ்லாஸ தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் பிரதம விருந்தினராக போரூட் நிறுவனத்தின் யாழ். மாவட்ட திட்டமுகாமையாளர் செல்வி மாறன் பிறன்ஸ்விக் கலந்துகொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக போரூட் நிறுவன நிகழ்ச்சித் திட்ட அதிகாரி நா. கோகுலதாஸும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. சிவசுவாமியும் கலந்துகொள்வர்.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்4

கோப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான தொகை மதிப்புத் தொடர்பான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சகல அதிபர்களும் பொருத்தமான ஆசிரியர் ஒருவருடன் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-10-72)

## சூழல் தின நிகழ்வு

அரியாலை அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள 'உலக சூழல தினம்' தொடர்பான நிகழ்வுகள் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

சங்கத் தலைவர் எஸ்.ரி. பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

தலைமையுரை, பேச்சு, கிராமிய சம்பாஷனை, வினாடிவினாப் போட்டி, 'நெஞ்சுறுத்தும் கானல்' என்னும் நாடகம் என்பன சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெறும். (எ)

## விளையாட்டு நிகழ்வுகள்

அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் மைதான அபிவிருத்தி நிதிக்காக பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் காட்சி உதைபந்தாட்டப் போட்டியில் இன்று கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் மன்னார் சென்ஜோசெவ் அணியை எதிர்த்து யாழ். யங்ஹென்றீஸ் அணி மோதவுள்ளது. (ம-ரி)

★ ★ ★

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் வி.கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகர விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-ரி)

★ ★ ★

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளிடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 8மணிமுதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. இதில் யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் கோட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்ற போட்டியில் தெரிவு செய்யப்பட்ட வீரவீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர். (ம-[illegible])

யாழ்.மாநகர சபையின்

# தொழிலாளர் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது

யாழ்ப்பாணம்,ஜூன்4

யாழ்.மாநகர சபையின் நிர்வாக அதிகாரியை உடனடியாக இடமாற்ற வேண்டும் என்பது உட்பட ஏழு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் யாழ். மாநகர சபை ஐக்கிய ஸ்தல ஸ்தாபன தொழிலாளர்கள் மேற்கொண்டு வரும் வேலைநிறுத்தப் போராட்டம் மூன்றாவது நாளாக நேற்றும் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை விடுமுறை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த இந்தப் போராட்டம் நேற்று மீண்டும் நடந்தது. இந்தப் போராட்டத்தால் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சுத்திகரிப்புப் பணிகள் எதுவும் இடம்பெறவில்லை.

இதற்கிடையில் தற்காலிக ஊழியர்கள் சிலருக்கு நிரந்தர நியமனக் கடிதங்களை மாநகர சபை நிர்வாகம் நேற்று வழங்குவதாக முன்னர் தெரிவிக்கப்பட்டபோதும் நேற்று அக்கடிதங்கள் வழங்கப்படவில்லை.

இன்றும் தமது போராட்டம் தொடரும் எனவும் -

தமது கோரிக்கைகளுக்குத் தகுந்த பதில் கிடைக்காதுவிட்டால் நாளை புதன்கிழமை தொடக்கம் மாநகரசபை அலுவலகத்தின் முன்பு தாம் மறியற்போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் -

ஐக்கிய ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் ஜே. ரஜினிகாந் தெரிவித்தார்.

தமது போராட்டத்துக்கு மாநகர சபையின் வேறு சில தொழிலாளர் சங்கங்களும் ஆதரவினை வழங்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-10)

## சிற்றூழியர் சங்கமும் போராட்டத்தில் இணைகிறது

யாழ்ப்பாணம்,ஜூன்4

யாழ். மாநகரசபை முன்பாக சுத்திகரிப்புத் தொழிலாளர் மேற்கொண்டு வரும் போராட்டத்தில் இன்று தாமும் இணையவிருப்பதாக மாநகரசபை சிற்றூழியர் சங்கம் அறிவித்துள்ளது.

நிரந்தர நியமனம், பதவியுயர்வு, உட்பட நான்கு கோரிக்கைகளை ஏற்கனவே தமது சங்கம் முன்வைத்தது என்றும் -

இதுவரை அதற்கு உரிய நடவடிக்கை எடுக்காததால் இன்று முதல் சுத்திகரிப்புத் தொழிலாளர்களுடன் இணைந்து வேலை நிறுத்தத்தில் குதிக்க முடிவு செய்துள்ளோம் என்றும் -

சிற்றூழியர் சங்கம் அறிவித்துள்ளது. (ம-10-51)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்4

யாழ்.கந்தர்மடம் செல்வ நாகபூசணி அம்பாள் ஆலய பஞ்சகுண்ட பக்ஷ புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 7 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8 மணிமுதல் 5மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகளை சிவாகமகிரியா ஞானபூபதி பிரம்மஸ்ரீ செ. பரமானந்தக் குருக்கள் நிகழ்த்துவார். (எ-ரி)

★ ★ ★

அரியாலை,ஜூன்4

நீர்வேலி தெற்கு, ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா இன்று செவ்வாய்க் கிழமை இரவு 8.30மணிக்கு ஆரம்பமாகி நாளை புதன்கிழமை காலை வரை தொடர்ந்து இடம்பெறும்.

இன்று முற்பகல் 10 மணிக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து நண்பகல் மாகேசுவர பூசை இடம்பெறும். (எ-17)

★ ★ ★

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தப் பெருவிழா உற்சவம் இன்று மாலை 5 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறும் இந்த உற்சவப் பெருவிழா நிகழ்வில் 12ஆம் திகதி மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும் பவனியும் நடைபெறும். மறுநாள் காலை 7.30 மணிக்குத் திருப்பலியும், அந்தோனியார் திருச்சொரூபப் பவனியும் நடைபெறும். (ம-15)

★ ★ ★

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா வழிபாடுகள் இன்று மாலை 5.30 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகின்றன. எதிர்வரும் 12ஆம் திகதிவரை நவநாள் ஆராதனைகள் மாலை நேரங்களில் இடம்பெறும். அருட்திரு. எவ்ஏ. தேவராஜா (அ.ம.தி.) அடிகள் மறையுரை வழங்குவார்.

எதிர்வரும் 13ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி யாழ். ஆயர் மேதகு [illegible] சௌந்தரநாயகம் ஆண்ட[illegible] கொடுக்கப்படும் அன்று மாலை 4.30 மணிக்கு தேர்ப்பவனி இடம்பெறும். (ம-51)

ஜப்பான் தென்கொரியா

# உலகக் கிண்ண கால்பந்து

2002 FIFA WORLD CUP KOREA JAPAN

31.05.02 - 30.06.02





துருக்கி வீரர்கள் தன்னை ஆட விடாத முறையில் தவறாக விளையாடுவதாக நடுவரிடம் முறையிடும் பிரேஸில் அணி வீரர் ரிவால்டோ (நடுவில் கைகளை உயர்த்தியவாறு காணப்படுபவர்)

# சிவப்பு அட்டை காட்டப்பட்டு 3 வீரர்கள் நேற்று வெளியேற்றம்

பெய்ஜிங்,ஜூன்4

உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகளில் நேற்று 3போட்டிகள் இடம்பெற்றன. இவற்றில் பிரேஸில், மெக்ஸிக்கோ, இத்தாலி ஆகிய அணிகள் வெற்றிபெற்றன.

முதலாவது ஆட்டம் ஜப்பானின் நிகாடா மைதானத்தில் இடம்பெற்றது. குரோஷிய அணியை எதிர்த்து மெக்ஸிக்கோ மோதியது. முதற்றடவையாக இந்த உலகக் கிண்ணப் போட்டியில் வீரர் ஒருவர் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். ஆட்டத்தின் 60ஆவது நிமிடத்தில் குரோஷிய அணியின் சிவ்கோவிக் தவறான முறையில் விளையாடியமைக்காக சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதன் மூலம் கிடைத்த பெனால்டி உதையைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்ட குரோஷிய அணி ஒரு கோலைப் பெற்றது.

தொடர்ந்து இரு அணி வீரர்களும் கோல் அடிப்பதற்கு தீவிரமாக முயன்றனர் எனினும் கோல் எதுவும் பெறப்படவில்லை. இறுதியில் 1-0 என்ற கோல் அடிப்படையில் மெக்ஸிக்கோ குரோஷியாவை வென்றது. கடந்த உலகக் கோப்பைப் போட்டியின் போது முதல தடவையாகக் கலந்துகொண்ட குரோஷிய அணி அப்போட்டியில் 3ஆவது இடத்தைக் கைப்பற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது ஆட்டம் உலகின் மிகப் புகழ்பெற்ற வீரர்களைக் கொண்டுள்ள பிறேஸில் அணிக்கும் துருக்கி அணிக்கும் இடையில் இடம்பெற்றது. 2-1 என்ற கோல் அடிப்படையில் பிறேஸில் அணி வெற்றிபெற்றது.

ஆரம்பத்தில் துருக்கி அணி வேகமாக ஆடியது. அந்த அணி வீரர் ஹஸன் அபாரமாக ஒரு கோல் அடித்து தனது அணியின் நிலையைப் பலப்படுத்தினார். ஆட்டத்தின் 85ஆவது நிமிடத்தில் துருக்கி அணி வீரர் அல்பே, முறைகேடாக விளையாடினார் என்பதற்காக நடுவரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார். இதனால் 10 வீரர்களுடன் ஆடவேண்டிய இக்கட்டு நிலைக்கு துருக்கி அணி தள்ளப்பட்டது.

இதனைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட பிறேஸில், ஆட்டத்தின் பின்பாதியில் ஒரு கோலைப் போட்டது. அந்த அணியின் புகழ்பெற்ற வீரரான ரொனால்டோ ஒரு கோல் அடித்து ஆட்டத்தை சமநிலைப்படுத்தினார்.

ஆட்டத்தின் பின்பாதியில் பிறேஸில் அணி, திடீரென தனது ஆட்ட வடிவத்தை மாற்றித் தாக்குதல் ஆட்டம் நடத்த ஆரம்பித்தனர். துருக்கி அணியினரும் சளைக்காமல் அவர்களைத் தடுத்தபடி இருந்தனர். 92 ஆவது நிமிடத்தில் பிறேஸில் அணி வீரர் ரிவால்டோ ஆடுவதற்கு இடையூறாக இருந்தார் என்பதற்காக துருக்கி வீரர் ஹகான் அன்ஸால், நடுவரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

இதன் மூலம் கிடைத்த பெனால்டி உதையை கோலாக்கிய ரிவால்டோ, அணிக்கு வெற்றியைத் தேடித்தந்தார்.

மூன்றாவது ஆட்டம் இத்தாலிக்கும் ஈகுவடோருக்கும் இடையில் நடந்தது. இதில் 2-0 என்ற கோல் அடிப்படையில் இத்தாலி அணி இலகுவாக வெற்றி பெற்றது.

இத்தாலியின் முன்னணி ஆட்டக்காரர் கிறிஸ்ரியன் வைரி ஆட்டம் ஆரம்பித்த ஆறாவது நிமிடத்திலேயே முதலாவது கோலை அடித்தார். தொடர்ந்து 27ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலையும் அடித்து அணிக்கு வெற்றியைத் தேடித்தந்தார். (ம)

## இன்று நடக்கும் ஆட்டங்கள்

சியோல்,ஜூன்4

உலகக கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள், போட்டி நடைபெறும் நாடு, நேரம்(உள்ளூர் நேரம்) என்பன வருமாறு:-

★ சீனா எதிர் கொஸ்ராரிக்கா (கொரியா - பகல் 12.00)

★ கொரியா எதிர் பொலன்ட் (ஜப்பான் - மாலை 5.00)

★ ஜப்பான் எதிர் பெல்ஜியம (ஜப்பான் - பிற்பகல் 3.00) (ம)




நடுவரால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்படும் குரோஷிய அணி வீரர் சிவ்கோவிக்.

# கிரிக்கெட் உலகை அதிரவைத்த குரென்ஜேயின் அகால மரணம்



ஜோஹன்பேர்க்,ஜூன்4

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ஹன்சி குரென்ஜேயின் அகால மரணம் கிரிக்கெட் அபிமானிகளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விமான விபத்தில் பலியான குரென்ஜே குறித்து தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா கூறுகையில் "ஒரு பெரும் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட பின்னரும் மனந்தளராது உறுதியுடன் மீண்டும் தனது வாழ்க்கையை சீரமைத்துக் கொண்ட குரென்ஜேயின் வாழ்க்கைச் சரித்திரம் இளைஞர்களுக்கு ஒரு முன் மாதிரி" என்று தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியாவில் நடைபெற்ற ஒரு நாள் போட்டிகளின் முடிவுகளை முன்கூட்டியே நிர்ணயிக்கும் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட குரென்ஜே கிரிக்கெட் விளையாட ஆயுள் தடை விதிக்கப்பட்டது.



விபத்து நடந்த இடத்திலிருந்து குரென்ஜேயின் சடலம் எடுத்துச்செல்லப்படுகின்றது.

தலைமைப் பதவியில் இருந்தபோது தென்னாபிரிக்க அணியை உலகில் தலைசிறந்த அணியாக மாற்றி அமைத்த அவருக்கு இவ்விளையாட்டில் அநேக விசிறிகளைப் பெற்றுத் தந்துள்ளது.

நிறவெறிக் கொள்கையால் தென்னாபிரிக்க அணி சர்வதேச போட்டிகளிலிருந்து தடை செய்யப்பட்டு, பின்னர் சர்வதேச அங்கீகாரத்துடன் மீண்டும் போட்டிகளில் பங்கேற்கத் தொடங்கியபோது தென்னாபிரிக்க அணியின் தலைவர் பதவியை ஏற்ற குரென்ஜே தனது திடமான, சாதுரியமான வழிநடத்தலின் மூலம் தென்னாபிரிக்க அணியின் புகழின் உச்சிக்கே கொண்டு வந்தார்.

1969 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 25 ஆம் திகதி பிறந்த இவர் 1992 இல் மேற்கிந்திய அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் அறிமுகமாகி அக்காலப்பகுதியில் இந்தியாவிற்கெதிரான போட்டியில் முதலாவது சதத்தைப் பெற்றார். 1994 ஆம் ஆண்டு முதன் முதலாக டெஸ்ட் கிரிக்கெட் அணிக்கு தலைமையேற்ற இவர் தனது விடாமுயற்சியாலும் திறமையாலும் சர்வதேச ஒருநாள் போட்டி அணிக்கு தலைமைப் பொறுப்பை ஏற்று தென்னாபிரிக்க அணியை 1999 இல் நடைபெற்ற உலகக்கிண்ணப் போட்டியின் அரையிறுதி மட்டும் கொண்டு வந்த பெருமைக்குரியவர்.



கிரிக்கெட் சூதாட்டம் குறித்த விசாரணையின் போது குரென்ஜே.

இவ்வாறு புகழின் உச்சிக்குச் சென்ற இவரின் வாழ்க்கையில் விதி விளையாடத் தொடங்கியது. 2000 ஆம் ஆண்டு இவருக்கெதிரான கிரிக்கெட் சூதாட்ட குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதையடுத்து சர்வதேச கிரிக்கெட் போட்டி களில் விளையாட அவருக்கு ஆயுள்காலத் தடை விதிக்கப்பட்டது.

தென்னாபிரிக்க அணியை புகழ உச்சிக்குக் கொண்டு சென்ற குரென்ஜே சூதாட்டக் குற்றச்சாட்டுக்கு இலக்காகி தனவான்களின் விளையாட்டான கிரிக்கெட்டின் மதிப்பை குறைத்தது விதியின் விளையாட்டன்றி வேறென்ன.

(ஒ-ரி)

# தீவிரவாதிகள் குறித்து பெர்னாண்டஸ் கண்ணீர்

சிங்கப்பூர் சிற்றி,ஜூன்4

காஷ்மீர் தீவிரவாதிகளின் கொடுமைகள் குறித்து இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கண்ணீர் விட்டு அழுதார்.

சிங்கப்பூரில் இடம்பெற்ற பாதுகாப்பு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளின் மாநாட்டில் அவர் உரையாற்றிய போதே இந்தச் சம்பவம் நடந்தது.

அந்த மாநாட்டில் பெர்னாண்டஸ் உரையாற்றிய போது காஷ்மீரிலும், இந்தியாவிலும் தீவிரவாதிகள் நடத்தும் தாக்குதல்கள் பற்றியும், அதனால அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்படுவது பற்றியும் விளக்கினார். அப்போது உணர்ச்சி மேலீட்டால் அவர் கண்ணீர் விட்டு அழுதார். அதற்காக அவர் சபையினரிடம் மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:-

பாகிஸ்தானுடன் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியில் இந்தியா அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்காது. ஆனால், தீவிரவாதத்துக்கு எதிரான போராட்டத்தை இந்தியா தொடரும்.

இந்திய மக்கள் ஆத்திரத்துடனும் வேகத்துடனும் உள்ளனர். பாகிஸ்தான் மீது போர் தொடுக்குமாறு பிரதமர் வாஜ்பாய்க்கு நெருக்குதல்கள் அதிகரித்துவருகின்றன. இந்த நிலையில் பாகிஸ்தானுடன் போர் மூண்டால் இந்தியா அணு ஆயுதத்தை முதலில் பயன்படுத்தும் நாடாக இருக்காது!

என்று தெரிவித்தார்.

(ஒ)

# பாலியல் வல்லுறவுகள் பங்களாதேஷில் அதிகம்

## மனித உரிமைக் குழு தெரிவிப்பு

டாக்கா,ஜூன்4

பங்களாதேஷில் கடந்த மாதத்தில் மட்டும் 145 பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் 28 பெண்கள் அரசியல் காரணங்களுக்காகக் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் மனித உரிமைகள் அமைப்பொன்று தெரிவித்துள்ளது.

பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பெண்களில் 61பேர் காடையர் குழுக்களினால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதாகவும் 18 பேர் இதில் மரணமடைந்துள்ளதாகவும் அந்தக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் கடந்த காலங்களில் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் அதிகரித்துவருவதாகவும் அக் குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

(ஒ-12)

## இஸ்ரேலிய அமைச்சர் கொலை வழக்கில்

# தீவிரவாதத் தலைவரை விடுவித்து பலஸ்தீன நிர்வாக நீதிமன்றம் தீர்ப்பு!

காஸா,ஜூன்4

இஸ்ரேலிய அமைச்சரின் படுகொலைக்குக் காரணமானவர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட பலஸ்தீனத் தீவிரவாதியை உடனடியாக விடுதலை செய்து, பலஸ்தீன நிர்வாக நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்தத் தீர்ப்பு இஸ்ரேலுக்குக் கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

காஸாவில் உள்ள பலஸ்தீன நீதிமன்றம், பலஸ்தீன விடுதலை முன்னணியின் தலைவரான அஹமட் சதாத் என்ற அந்தத் தீவிரவாதிக்கு இஸ்ரேலிய அமைச்சரின் கொலையில் தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று கூறியுள்ளனர்.

இந்தத் தீர்ப்பை இஸ்ரேல் உடனடியாகக் கண்டித்துள்ளது. தீவிரவாதி தண்டிக்கப்படாவிட்டால் பலஸ்தீனர்களுடன் தான் ஏற்படுத்திய உடன்படிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்படும் என்றும் இஸ்ரேல் எச்சரித்துள்ளது. இஸ்ரேலிய அரசின் பேச்சாளர் ராணன் கிசின் கூறுகையில்-

'சதாத் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டால் இஸ்ரேல் மிக அபாயகரமான முடிவை எடுக்கவேண்டியிருக்கும். பலஸ்தீன நீதிமன்றம் நீதி தவறினால் இஸ்ரேல் நீதி வழங்கும்' என்று எச்சரித்தார்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் இஸ்ரேலிய சுற்றுலாத்துறை அமைச்சர் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டதற்கு சதாத்தே காரணம் என்று கூறிய இஸ்ரேல், அவர் மீது பலஸ்தீன நிர்வாகம் சட்டநடவடிக்கை மேற்கொள்ளும் வரை யஸீத் அரபாத் அவரது அலுவலகத்தை விட்டு வெளியேற முடியாது என்று கூறி ரமழாவில் உள்ள அரபாத்தின் அலுவலகத்தை இராணுவ முற்றுகைக்கு உட்படுத்தியிருந்தது.

இதனையடுத்து சதாத் உட்பட ஆறுபேரைக் கைதுசெய்த பலஸ்தீனப் பொலீஸார் அவர்கள் மீது பலஸ்தீன நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். அதன் பிறகே இஸ்ரேலியப் படையினரின் முற்றுகை விலக்கப்பட்டு அரபாத் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டார்,

ஆனால், தற்போது சதாத்தையும் மற்றவர்களையும் விடுவிக்குமாறு பலஸ்தீன நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதால், இஸ்ரேலிய இராணுவம் மீண்டும் அரபாத் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

(ஒ)

## பாகிஸ்தான் பஸ் விபத்தில் 45 பேர் பலி!

இஸ்லாமாபாத்,ஜூன்4

பாகிஸ்தானில் பயணிகள் பஸ் ஒன்று பாலத்தில் இருந்து ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 45 பேர் உயிரிழந்தனர்; 10 பேர் காயமடைந்தனர்.

மதவழிபாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக பக்தர்கள் சென்று கொண்டிருந்த பஸ்ஸே விபத்துக்குள்ளானது.

(ஒ)

## அமெரிக்கப் படை நடவடிக்கை

இஸ்லாமாபாத்,ஜூன்4

ஆப்கானிஸ்தானிலிருந்து தலிபான் மற்றும் அல்கெய்டா தீவிரவாதிகள் கிழக்கு மலைப்பகுதி ஊடாக பாகிஸ்தானுக்குள் நுழைவதைத் தடுக்க அமெரிக்கப் படையினர் பெரும் எடுப்பில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இதில் நூற்றுக்கணக்கான அமெரிக்க இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அமெரிக்க விமானப்படையின் ஹெலிகளும் இந்த நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்டன.

(ஒ)

## தேர்தல் மோசடியை கண்டித்து

# போராட்டம் நடத்திய டாக்டர் ராமதாஸ் கைது

சென்னை,ஜூன்4

தமிழகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சைதாப்பேட்டை சட்ட மன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் ஆளும் அ.தி.மு.கவினர் மோசடிகளை மேற்கொண்டதாகத் தெரிவித்து நேற்றுக் காலை போராட்டம் நடத்திய பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் டாக்டர் ராமதாஸை தமிழகப் பொலீஸார் கைது செய்தனர்.

சைதாப்பேட்டை பகைல் மாளிகை எதிரே பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் மணி தலைமையில் கண்டனப் போராட்டம் ஆரம்பமானது சிறிது நேரத்தில் டாக்டர் ராமதாஸ் அங்கு வந்து போராட்டத்தில் கலந்து கொண்டார் அதனையடுத்து அங்கு திரண்டிருந்த பொலீஸார், அனைவரையும் கைது செய்து தமது வாகனங்களில் ஏற்றிச்சென்றனர்.

இது ஒரு புறமிருக்க இடைத் தேர்தலில் அ.தி.மு.கவினர் மோசடிகளில் ஈடுபட்டதாகக் கூறி நாளை புதன்கிழமை தி.மு.க. மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

(ஒ)

# பெற்றோலை அரசியல் ஆயுதமாக அரபுலகம் பயன்படுத்த முடியாது

## அபுதாபி மாநாட்டில் நிபுணர்கள் கருத்து

லண்டன்,ஜூன்4

அரபு நாடுகள் தம்மிடம் உள்ள பெற்றோலிய வளத்தை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி பிற நாடுகளைப் பணியவைத்த காலம் மாறிவிட்டதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அபுதாபியில் இடம்பெற்ற எரிபொருள் வளங்கள் தொடர்பான ஒரு மாநாட்டிலேயே இந்தக் கருத்து முன் வைக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

அரபுநாடுகள் தங்களது அரசியல் கொள்கைகளுக்கு ஆதரவாக பிற நாடுகளைச் செயற்படவைக்க இனி மேலும் பெற்றோலிய வளத்தைப் பயன்படுத்த முடியாது.

'பெற்றோல் தரமுடியாது என்று ஒரே குரலில் கூறும் ஒற்றுமை அரபு நாடுகளிடையே 30 ஆண்டுகளின் முன்னர் இருந்தது. ஆனால், இப்போது அந்த நிலைமை முற்றாக மாறிவிட்டது. ஏனெனில் எல்லைத் தகராறுகள் காரணமாக அரபுநாடுகளிடையேயான உறவுகள் சீர்குலைந்துவிட்டன. அதேசமயம், மேற்குலகுடனான அவற்றின் உறவுகள் வலுவடைந்து விட்டன.

சனத்தொகைப் பெருக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு ஆகியவை பல எண்ணெய் வள அரபு நாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

இதற்கிடையில், பெற்றோல் ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருவாய் குறைந்ததால் அரபு நாடுகள் பலவற்றின் வரவு செலவுத் திட்டங்களில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால் பொருளாதார வளர்ச்சி தேக்கமடைந்தது. இதற்கு அரபு நாடுகளின் மன்னர்கள் அனுபவிக்கும் ஆடம்பர வாழ்க்கை முறைகளும் ஒரு காரணமாகும். அத்துடன் அவற்றுக்கிடையேயான பூசல்கள் காரணமாக பாதுகாப்புக்காக அதிகமான ஆயுதங்களை வாங்கிக் குவிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால், அதற்கான அதிக செலவை அவை சுமக்க நேரிட்டது.

1973ஆம் ஆண்டு பெற்றோல் ஏற்றுமதி மூலம் அரபு நாடுகள் வருடத்துக்கு 2லட்சத்து 16ஆயிரம் கோடி ரூபாய்களை சம்பாதித்தன. ஆனால், அப்போது அரபு நாடுகளில் பற்றாக்குறை பட்ஜெட்டோ, வெளிநாட்டுக் கடன்களோ இல்லை. 1995ஆம் ஆண்டு இந்த வருமானம் 6லட்சத்து 12ஆயிரம் கோடி ரூபாவாக உயர்ந்த போதும், 1985ஆம் ஆண்டிலிருந்தே அரபு நாடுகள் பற்றாக்குறை பட்ஜெட்டையும், வெளிநாட்டுக் கடனையும் சந்திக்கத் தொடங்கிவிட்டன.

1973ஆம் ஆண்டு 14கோடி 20 லட்சமாக இருந்த அரபு மக்கள் தொகை, 2001ஆம் ஆண்டு 26கோடியாக - இருமடங்காக - உயர்ந்து விட்டது.

இப்போது அரபு நாடுகளில் அந்நியக் கடன்கள் சுமார் 24லட்சத்து 50ஆயிரம் கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 6கோடியே 20 லட்சம் அரபுக்கள் இப்போது வறுமைக் கோட்டின் கீழே வாழ்கின்றனர்.

இப்படி பல முனைகளிலும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான அரபுநாடுகள் பெற்றோலியத்தை மேற்குலகுக்கு விற்கவேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளன.

எனவே பெற்றோலை அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்த முடியாத நிலை அரபு நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

- இவ்வாறு நிபுணர்கள் கூறினர்.

இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவிக்கும் நாடுகளுக்கு தாம் பெற்றோல் விற்கப்போவதில்லை என்று 1973ஆம் ஆண்டு அரபுநாடுகள் தீர்மானம் நிறைவேற்றி இருந்தன. அதன் பின்னர் விழித்துக் கொண்ட மேற்குலக நாடுகள் திட்டமிட்டு அரபு நாடுகளை கடந்த 30 ஆண்டுகளில் படிப்படியாக பொருளாதாரச் சிக்கல்களுக்குள் இழுத்துவிட்டுள்ளதாகவும் ஒரு வாதம் ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

(ஒ)



நேபாள மன்னர் பிரேந்திராவும் அவரது குடும்பத்தினரும் படுகொலை செய்யப்பட்டதன் முதல் வருடப் பூர்த்தி நேபாளத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது. மன்னருக்கு மக்கள் அஞ்சலி செலுத்தியகாட்சி.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### பிறிமா கோழிக்குஞ்சுகள்

பிறிமா கைலைன் வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சுகளும் எம்மிடம் பதிவு செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள் ளலாம். தொடர்புகள்: மாருதி ரெக்ஸ், இல.1, பஜார்வீதி யாழ்ப்பாணம்; சிற்றி காமென்ஸ், 535A, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (4365)

### விற்பனைக்கு

மஞ்சள், வெள்ளை, சிவப்புகண், பிங்கஸ் வேறு பல நிற லவ் பேட்ஸ் குருவிகளும் மற்றும் கினிக் கோழிக குஞ்சுகளும் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பிற்பகல் 1.00 மணிக்குப் பின்பு அ.அருமைராசா இதயராசா, பழைய பொலிஸ்நிலையம், பழம் றோட், ஆனைக்கோட்டை. (4449)

1 சிறி மைனர் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.ரவீந்திரகுமார், 596/5, K.K.S. வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (4461)

### நாய்க்குட்டி விற்பனைக்கு

கறுப்புநிற அல்சேஷன் 40 நாள் நிரம்பிய பெண்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: புதன்கிழமைகளில் ஐ.சிறிதரன், M.S.லேன், கோண்டா வில் கிழக்கு, கோண்டாவில். (4454)

### மணமகள் தேவை

31வயது நிரம்பிய, யாழ்ப்பாணத் தில் நகை வியாபாரம் செய்யும் மண மகனுக்கு (கேட்டை நட்சத்திரம்) மணமகள் தேவை. முழுவிவரங் களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1530, மே/பா. உதயன், யாழ்ப்பாணம். (4451)

## தென்பகுதியிலிருந்து எடுத்துவரப்படும் கூரை ஓடுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்4

தென்பகுதியிலிருந்து தினமும் கூரை ஓடுகள் லொறிகள் மூலம் யாழ். எடுத்துவரப்படுகின்றன.

வென்னப்புவ, நாத்தாண்டிய, திவு லப்பிட்டிய ஆகிய தேர்தல் தொகுதி களில் உள்ள ஓட்டுத் தொழிற் சாலைகளில் உற்பத்தி செய்யப்படும ஓடுகளே இவ்வாறு எடுத்து வரப்படு கின்றன.

சாதாரண ஓடு ஒன்று 15ரூபா தொடக்கம் 17ரூபா வரைக்கும், முகட்டு ஓடு ஒன்று 17ரூபா தொடக் கம் 20 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்பட்டுவருகின்றன. (எ-173)

## சந்தைக்குள் விகாரை

கொழும்புத்துறை,ஜூன்4

அரியாலை தபாற்கட்டைச் சந்தி யில் அமைந்துள்ள பொதுச்சந்தை வளாகத்தினுள் படையினர் விகாரை ஒன்றை அமைத்து வழிபட்டு வரு கின்றனர்.

கடந்த காலங்களில் நடந்த இடம் பெயர்வுகளின் போது குறித்த பகுதி, படையினரின் கட்டுப்பாட்டில் இருந் தது குறிப்பிடத்தக்கது. (ஒ-13-ரி)

## கொழும்புத்துறையில் புதியமுகாம்

கொழும்புத்துறை,ஜூன்4


கொழும்புத்துறை நெடுங்குளம் பகுதியிலுள்ள பிரசவவிடுதி சுற்றாட லில் படைமுகாமொன்று புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

முகாம் அமைப்பிற்காக நெடுங் குளம் வீதியின் இருமருங்குகளிலு முள்ள மதில்கள், வேலிகள், மரங் கள் போன்றவை 'புல்டோசர்' மூலம் அகற்றப்படுவதாகவும், இதனால் இப் பகுதிகளிலிருந்து ஏற்கனவே இடம் பெயர்ந்த மக்கள் தம் வீடுகளைப் பார்க்கச்செல்ல அஞ்சுவதாகவும் கூறப்படுகிறது. (ஒ-13-ரி)

## தொலைக்காட்சிப் பிரியர்களே!

**'We bring the world to your home'**





யாழ். குடாநாட்டில் 100க்கும் மேற்பட்ட செய்மதி தொலைக்காட்சி அன்ரனாக்களைச் சிறந்தமுறையில் விற்பனை செய்து பராமரித்துவரும் Sats Tech நிறுவனத்தாரின் உத்தரவாதம் மற்றும் விற்பனைக்குப் பிந்திய சேவையுடன் டிஸ் அன்ரனாக்கள். டிஜிரல். அனலொக் ரிசீவர்கள LNBFக்கள் மற்றும் Cable TVக்குரிய RF AMP, Channel Mixer, Modulater என்பன முழுத் தொகுதியாகவும் (சிஸ்ரம்) தனித்தனியாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

8' அடி டிஜிரல் சிஸ்ரம் Rs.30,000/=

10' அடி டிஜிரல் சிஸ்ரம் Rs.35,000/=

அத்துடன் உங்கள் செய்மதி உபகரணங்கள் யாவும் சிறந்தமுறையில் திருத்திக்கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு:

**SATS TECH ENGINEERS**

M/S JTI
10/11B, Stanley Road,
Jaffna. T.P.: 3335

M/S National Video centre,
182, K.K.S. Road,
Kokkuvil.

(4459)

ஓம்
அம்பிகை துணை

## யஜ்ஞோபவீத தாரண ப்ரம்மோபதேச அழைப்பு

அன்புடையீர்,

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான சித்ரபானு வருஷம் வைகாசி மாதம் 22ஆம் நாள் நாளை (05.06.2002) புதன்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 9.30 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள கடகலக்ன சுபமுகூர்த்தத்தில்,

விநாயகப் பெருமான் துணையுடனும் ஆதிவைரவப் பெருமான் திருவருளுடனும் கண்ணகைத்தாயின் கருணையுடனும் நயினை நாகபூஷணி அம்மனின் அருட்பெருக்கோடும்

உத்தரகோவை சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக்குருக்கள் - இராஜேஸ்வரி அம்மா தம்பதிகளின் பௌத்திரனும் கீரிமலை ஆதீனத்தைச் சேர்ந்த இளவாலை சிவஸ்ரீ ந.இராமச்சந்திரக்குருக்கள் - சரோஜினி அம்மா தம்பதிகளின் தௌஹித்திரனும் எமது ஜேஷ்ட புத்திரனுமாகிய

### சிரஞ்ஜீவி ச.கௌரிசங்கர சர்மா

அவர்களுக்கு

யஜ்ஞோபவீத தாரண ப்ரம்மோபதேசம் செய்ய

ஸ்ரீ காஞ்சிப் பெரியவரின் கிருபையுடனும் சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக்குருக்கள் *(நயினை நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவகுரு)* பிரம்மஸ்ரீ தா.மஹாதேவக்குருக்கள் *(அதிபர், தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்)* அவர்களின் ஆசியுடனும் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் எமது இல்லத்தில் நிகழும் சுபமுகூர்த்தத்தில் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராகக் கலந்து உபவீதனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ப்ரம்மோபதேச குரு: சாஹித்ய சிரோமணி ப.முத்துக்குமாரசாமிக் குருக்கள்
(பிரதமகுரு, நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம்)

**வரவேற்பாளர்கள்:**

இ.ஸ்ரீரங்கநாதக் குருக்கள் தம்பதிகள் *(லண்டன்)*,
ப.பாலாம்பிகை *(மட்டக்களப்பு)*,
ப.முத்துக்குமாரசாமிக்குருக்கள் தம்பதிகள் *(நயினை)*,
ந. சந்திரசேகரசர்மா தம்பதிகள் *(கோவை)*,
ப.ராஜகோபால சர்மா தம்பதிகள் *(நல்லூர்)*,
ப.பாலசுப்பிரமணியக் குருக்கள் தம்பதிகள் *(கட்டப்பிராய்)*,
ப.குருநாத சர்மா தம்பதிகள் *(கோவை)*,
இராம பாலச்சந்திரக் குருக்கள் தம்பதிகள் *(இளவாலை)*,
ஸ்ரீதரக் குருக்கள் தம்பதிகள் *(கொழும்பு)*,
இ.இராஜேஸ்வரி *(இளவாலை)*.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்:

'அம்பிகை வாசா'
கண்ணகை அம்மன் கோவிலடி, கோப்பாய்.

ப.சண்முகராஜக் குருக்கள் - நகுலாம்பிகை தம்பதிகள்.

(C/22382)

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் பாதார விந்தங்களை அடைந்த

### திருமதி ஞானலக்ஸ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி

(B.A. ஆசிரியை)

தவப்பேறு: 11.01.1960 சிவப்பேறு: 03.06.1994
திதி: 04.06.2002

**இமைப்பொழுதும் எம் நெஞ்சில் இறவா அன்பே "ஞானா" எப்பிறப்பில் சந்திப்போம்.**

தகவல்:
A.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
(கணவர்.)

அன்புக் கணவர், தாய், சகோதரி, மைத்துனர், மாமா, மாமி, பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

(4462)

## புதிய அங்கத்துவம்

வலி.கிழக்கு தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் புதிதாகச் சேவையில் இருக்கும் புதிய சிற்றூர்திகளின் உரிமையாளருக்கான புதிய அங்கத்துவப் பதிவுகள் யாவும் 2002-05-26ஆம் திகதி தொடக்கம் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

எனவே, புதிதாகச் சேவையில் ஈடுபடவிரும்பும் அங்கத்துவப் பதிவுகள் 2003-01-01ஆம் திகதிக்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். (புதிய அங்கத்தவர்கள் சங்கத்தின் சேவை எல்லைக்குள் நிரந்தர வதிவிட தாரர்களாக இருக்கவேண்டும்.)

அச்சுவேலி - யாழ். சேவையில் ஈடுபட்டு தற்போது சேவையில் ஈடுபடா திருக்கும் சிற்றூர்திகளின் உரிமையாளர்கள், பழைய அங்கத்தவர்கள் 2002.06.30ஆம் திகதிக்கு முன்னர் சங்கத்தின் தலைவருடன் தொடர்பு கொண்டு தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

தலைவர்,
**வலி.கிழக்கு தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம், அச்சுவேலி.**

(4460)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### கணேசலிங்கம் நிரஞ்சன்

*(செயலாளர், விவசாய சம்மேளனம்)*

ஆண்டவன் படைப்பு 28.06.1977 அநியாய அழிப்பு 27.05.2000

திதி:நவமி 04.06.2002

**ஒரு நொடிப் பொழுதில் எம் மனம்**
**நோக விட்டுச் சென்று விட்டீர்!**
**ஒரு நொடிப் பொழுதும் நாம் உம்மை மறவோம்!**

*மட்டுவில் நுணாவில், மட்டுவில் மத்தி.*

**- விவசாய சம்மேளனம்.**

(4456)



உ

புங்குடுதீவு - பெருங்காடு

## அருள்மிகு கிராஞ்சயம்பதி கந்தசுவாமி தேவஸ்தான

## புனராவர்த்தன அஷ்ட பந்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேக விழா

முருகன் அடியார்களே!

நிகழும் மங்களகரமான சித்ரபானு வருஷம் வைகாசித் திங்கள் 24ஆம் நாள் (07.06.2002) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.56 மணிமுதல் 12.37 மணிவரையுள்ள சிங்க லக்கின சுபமுகூர்த்தத்தில் கலியுகவரதனாம் ஸ்ரீமுருகப் பெருமானுக்கு குடமுழுக்கு, பெருஞ்சாந்தி எனப்படும் மகா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

### கிரியைகள் விவரம்

05.06.2002 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகும்.
06.06.2002 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.
07.06.2002 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.56 மணிக்குமேல் மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதம குரு:
*சிவாகம கலாநிதி சிவஸ்ரீ* மு.பரமசாமிக் குருக்கள் (கோப்பாய்)

★ *முருகன் அடியார்கள் அனைவரும் கும்பாபிஷேகத்தைக் கண்டு தரிசித்து பால், தயிர், இளநீர், பூ, பழவகைகள் முதலியவற்றையும் தந்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.*

**- ஆலய பரிபாலன சபையினர்.**

(4457)

உதயன்

## உதவாத உடன்படிக்கைகள்

இலங்கை அரசாங்கம் ஒப்பந்தங்கள் செய்து கொள்வதில் சாதனை படைத்து உலக சாதனைகள் பதிவேடான 'கின்னஸில்' இடம்பெற்றால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அந்த அளவுக்கு அரசாங்கம் ஒப்பந்தங்கள் செய்வதில் தீவிரம்காட்டி வருகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் குறுகிய காலத்தில் செய்த முதலாவது ஒப்பந்தம் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்த ஒப்பந்தமாகும். புரிந்துணர்வு உடன்படிக்கை என்ற பெயரில் அந்த ஒப்பந்தம் இப்போது நடைமுறையில் இருக்கிறது.

இந்த ஒப்பந்தம் உண்மையில் வேண்டியதுதான். ஆனால், சோகம் என்னவென்றால் இந்த ஒப்பந்தம் அதாவது புரிந்துணர்வு உடன்படிக்கை சரிவர நிறைவேற்றப்படாமல் இருந்துவருவதுதான்.

இரண்டாவது ஒப்பந்தம் அயல் நாடான இந்தியாவுடன். அநேகமாக இந்த மாதம் இன்னும் சில நாள்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் செய்யும்போது ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் நோக்கம் போர் நிறுத்தம் மட்டுமல்ல. வடக்கு-கிழக்கில் மக்களின் நீண்டகால கஷ்டங்களை நீக்கி, இயல்பு நிலையை ஏற்படுத்த அரசும் புலிகளும் சமாதானப் பேச்சு நடத்தி, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு, நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதுதான் உண்மையான நோக்கம்.

அரசுத் தலைவர்களின் புதிய சிந்தனைகளும், நழுவல் பேச்சுகளும், தடுமாற்றமான செயற்பாடுகளும், பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் நோக்கம் நிறைவேறும் என்ற நம்பிக்கையை தகர்ப்பனவாக உள்ளன.

நாளாந்தம் சந்தேகம் வலுத்து வருகிறதே தவிர நம்பிக்கை வளர்வதாக இல்லை. போரினால் சீரழிந்து வந்த இந்த நாட்டுக்கு அவசியம் தேவைப்பட்ட உடன படிக்கையின் கதி இப்படியாகிவிட்டதே.

புரிந்துணர்வு உடன்படிக்கை சரிவர நிறைவேறுமானால் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகத்தில் இருக்கப்போகும் திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களின் ஒரு தொகுதியை இந்திய அரசுக் கம்பனிக்கு நீண்டகால குத்தகைக்குக் கொடுக்கும் ஒப்பந்தம் அது.

எண்ணெய்க் குதத்தைக் கொடுத்து இந்தியாவிடம இருந்து ஒருவகையில் போரியல் உதவி பெறுவதற்கும் புலிகளை அச்சுறுத்துவதற்குமான ஒப்பந்தம் அது என்று வர்ணிக்கப்படுகிறது.

அடுத்து அமெரிக்காவுடனும் இலங்கை ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளவிருக்கிறது. அது பாதுகாப்பு ஒப்பந்தம் என்று பகிரங்கப்படுத்தப்பட்டது. ஆனால் அமெரிக்க அரசும் இலங்கை அரசும் அதை மறுக்கின்றன. வெறுமனே அது ஒரு சேவை ஒப்பந்தம்தான் என்று இரு அரசுகளும் கூறுகின்றன.

அந்த ஒப்பந்தப்படி அமெரிக்கப் போர் விமானங்களும், கப்பல்களும் இலங்கை வரும். எரிபொருள் நிரப்பிக்கொள்ளும். அவற்றின் சிறு பழுதுகளும் திருத்தப்படும். மொத்தத்தில் அமெரிக்கப் போர்க் கப்பல்களும் விமானங்களும் முறையே இலங்கையின் கடற்பரப்பையும் வான்பரப்பையும் தாராளமாகப் பயன்படுத்திக்கொள்ளும்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையே இராணுவ ஒத்துழைப்பு பல வருடங்களாகவே இருந்து வருகிறது. அந்த நீண்டகால உறவை இந்தச் சேவை ஒப்பந்தம் மேலும் உறுதிப்படுத்தும் என்று அமெரிக்கா கூறுகின்றது. அதிலிருந்து விடயம் விளங்குகிறது.

நான்காவது ஒப்பந்தம் கடந்த வார இறுதியில் ஐரோப்பிய யூனியனுக்கும் இலங்கைக்கும் இடையே கைச்சாத்திடப்பட்டுவிட்டது. இலங்கை சார்பில் கைச்சாத்திட்டவர் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ.

அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அங்கே தஞ்சம் கோரிநிற்கும் இலங்கையர்களைத் திருப்பி இலங்கைக்குக் கொண்டுவருவதற்கான ஒப்பந்தம் அது.

பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று தஞ்சம் கோரும் இலங்கையர்களைத் திருப்பி அனுப்ப அந்த நாடுகள் வழிவகை தேடிக் கொண்டிருக்கின்றன. புதிய சட்டதிட்டங்களையும் கொண்டுவருகின்றன.

இந்த நிலையில் அமைச்சர் பெர்னாண்டோ விழுந்தடித்து இலங்கையின் சார்பில் ஐரோப்பிய யூனியனுடன் ஒப்பந்தம் செய்துகொள்கிறார். எதற்கு? ஐரோப்பிய நாடுகள் எதைச் செய்ய முயன்று வருகின்றனவோ அதை இலகுவாக்குவதற்கு. "நீங்கள் ஏன் கஷ்டப்படுகிறீர்கள். நாங்களே இலங்கையர்களை இலங்கைக்குக் கொண்டு வந்து சேர்த்துவிடுகிறோம்" என்ற தோரணையில்தான் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. இது தேவையா?

சமாதானம் வருமோ, வராதோ தெரியாது. அழிந்து போன வடக்கு - கிழக்கு இன்னும் கட்டியெழுப்பப்படவில்லை. வெளிநாடு சென்றவர்களை இந்த நிலையிலா வலிந்து திருப்பிக்கொண்டு வருவது? இது அரசின் வக்கிர புத்தியே தவிர வேறொன்றும் இல்லை.

# சமாதானத்துக்கு எதிரான சக்திகளை தென்பகுதி மக்கள் புறந்தள்ளவேண்டும்

## இளைஞர் சேவைகள் மன்ற பிரதிநிதி உரை

யாழ்ப்பாணம்,ஜூன்4

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் இவ்வேளையில் சமாதானத்துக்கு எதிரான பேரினவாத சக்திகளை தென்பகுதி மக்கள் புறந்தள்ளவேண்டும்.

அண்மையில் மகரகமவில் நடைபெற்ற தேசிய இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் இளைஞர் சேவைகள் மன்றக் குழுவுக்கு தலைமை வகித்த யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் இ.ஐங்கரன் இவ்வாறு தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில், தேசிய இளைஞர் சம்மேளனத் தலைவர் உப்புல்ஜீ தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் உரையாற்றிய ஐங்கரன் மேலும் தெரிவித்தாவது:-

சமாதானத்துக்கு எதிரான சக்திகளின் செயற்பாட்டினால் சமாதான முயற்சிகளுக்கு பங்கம் ஏற்படக்கூடிய நிலைமை காணப்படுகின்றது.

எனவே, இவ்வாறான சக்திகளை இனங்கண்டு ஒதுக்கித் தள்ளுவதன் மூலம் எமது நாட்டின் அமைதி நிலைமையை மேலும் உறுதி செய்துகொள்ளமுடியும்.

கொல்லாமைத் தத்துவத்தைப் போதிக்க வேண்டிய பௌத்த பிக்குகள் சமாதானத்தை நிறுத்தும்படியும் போரைத் தொடங்குமாறும் கோஷமிடுவது வேடிக்கையாகவும் வேதனையாகவும் உள்ளது.

தென்பகுதி மக்களிடையே சமாதான விழிப்புணர்வை விரிவுபடுத்தும் கடமை, இளைஞர் யுவதிகளிடமே உள்ளது. மக்களிடம் சமாதான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் தமிழ் மக்களின் அபிலாஷைகள், விருப்பு வெறுப்புகளை சிங்கள மக்களுக்கு தெரியப்படுத்துமாறு இங்குள்ள சிங்கள இன சகோதரர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (ம-4)

# ஊனமுற்ற படையினர் புலிகளுக்கு அன்பளிப்பு

## சக்கரநாற்காலிகள் வழங்கினர்

கொழும்பு,ஜூன்4

ஊனமுற்ற படையினர் விடுதலைப் புலிகளுக்கு சக்கர நாற்காலிகள் மற்றும் ஊன்றுகோல்களை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

சக்கர நாற்காலிகளையும், ஊன்றுகோல்களையும் புலிகளுக்கு வழங்கவென ஊனமுற்ற முன்னாள் இராணுவ வீரர்களின் சங்கப் பிரதிநிதிகள் கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு எடுத்துச்சென்றிருந்தனர்.

சங்கத்தின் தலைவர் அசோக தயாரத்ன இது பற்றிக் கூறுகையில் -

"காயமடைந்த இராணுவ வீரர்களுக்கு செயற்கை உறுப்புக் கள் மற்றும் உதவி உபகரணங்கள் என்பன பற்றாக்குறையாக இருந்த பொழுதிலும் விடுதலைப் புலிகளுக்கு நாங்கள் இவற்றை அன்பளிப்பாக வழங்குகிறோம்.

"தீவிரவாத சக்திகள் சமாதான நடவடிக்கைகளை சீர்குலைத்து வருகினறன. எங்களது இந்த அன்பளிப்பு மூலம் தேசிய ஒருங்கிணைப்பு ஏற்பட வழிபிறக்கும் என்று நம்புகிறோம்."

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-9)

# கோஷ்டி பூசலால் திண்டாடும் திருமலை தள வைத்தியசாலை

திருகோணமலை,ஜூன்4

மாவட்ட வைத்திய அதிகாரி யார் என்பது தெரியாத நிலையில் திருகோணமலை தள வைத்தியசாலை திண்டாடுகின்றது. இதனால் வைத்தியர்கள் முதல் சிற்றூழியர்கள் வரை அனைத்துத் தரப்பினரும் இரண்டு பட்டு நிற்கின்றனர்.

வைத்தியசாலையின் சிலை வைத்தியர்களிடையே நீண்டகாலமாகவே மனக்கசப்பு இருந்துவந்தது. இது பனிப்போராகத் தொடர்ந்து அண்மையில் பூகம்பமாக வெடித்திருக்கிறது.

கடந்த 9 வருடங்களாகத் திருமலை தள வைத்தியசாலையில் பணியாற்றிவந்த ஒரு வைத்தியரை இடமாற்றியதால் மாவட்ட வைத்திய அதிகாரியை இடமாற்ற வேண்டும் என்று சிலர் கங்கணம் கட்டிக்கொண்டு நின்றனர்.

கடந்த 31ஆம் திகதி மாவட்ட வைத்திய அதிகாரிக்கு இடமாற்றக் கடிதம் வந்தது. உடனடியாக அவரால் செல்ல முடியாது என்பதாலும், ஏற்கனவே தொலைபேசியிலும் நேரடியாகவும் மிரட்டப்பட்டதாலும் பொலீஸ் பாதுகாப்பை மாவட்ட வைத்திய அதிகாரி நாடியிருந்தார்.

இதேவேளை, தாம் விடுமுறையில் இருந்தபோது தமது ஆசனத்தில் அமர்ந்து கடமைசெய்த ஒரு வைத்தியர் மீது மாவட்ட வைத்திய அதிகாரி முறைப்பாடு செய்திருக்கிறார். அவரை விசாரிக்கச் சென்ற பொலீஸார் தீவிரவாதியைப் பிடிக்கச்செலவது போன்று பெரும் எண்ணிக்கையில் சென்று விசாரித்தனராம்.

பொது வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டதுமே தாம் இடமாறிச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டதாகவும், ஏற்கனவே இருந்த ஒரு வைத்தியரின் அஜாக்கிரதையால் ஒருவர் மரணிகக நேர்ந்த சம்பவத்தை மக்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும், மாவடட வைத்திய அதிகாரி இப்பொழுது தெரிவித்திருக்கின்றார்.

(ஒ)

# அமெ. தூதர் யாழ்.வருகிறார்

கொழும்பு,ஜூன்4

இலங்கைக்கான அமெரிக்கத்தூதர் அஸ்லி வில்ஸ் எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணததுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அவர் அரசியல் பிரமுகர்களையும் அரச அதிகாரிகளையும் சந்திப்பார். பொது அமைப்புகளின் பிரதிநிதிகளோடும் தூதர் கலந்துரையாடுவார்.

தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் தொடர்பாக அமெரிக்காவின் நிலைப்பாடு பற்றி தூதர் விளக்கமளிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நாளை

வைகாசி 22
புதன்கிழமை
(05.06.2002)
திதி : தசமி
நள்ளிரவு 12.28 வரை.
நட்சத்திரம்: உத்தரட்டாதி
பிற்பகல் 3.51 வரை.
சுபநேரம் : 4.22 - 5.52
ராகுகாலம்: 11.52 - 1.22
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

எல்லாம் தெரிந்ததுபோல் நடிப்பவர், இறுதியில் எதனையும் தெரிந்துகொள்ள முடியாது.

### சமூக நலன்புரி அமைச்சின்

# நடமாடும் செயலக சேவையில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

யாழ்ப்பாணம்,ஜூன்4

சமூக நலன்புரி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட சமாதான நடமாடும் சேவை நேற்றுமுன்தினம யாழ். மத்திய கல்லூரியில் இரண்டாவது நாளாக இடம்பெற்றது.

வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்கள், வலதுகுறைந்தோர், முதியவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் இந்த இரண்டு நாள் நடமாடும் சேவையிலும் கலந்துகொண்டு பல சேவைகளைப் பெற்றனர்.

இந்த இருநாள் சேவையிலும் ஆயிரத்து 700பேருக்கு மூக்குக் கணணாடிகளும், 80 பேருக்கு முச்சக்கர வண்டிகளும், 60பேருக்கு தையல் இயந்திரங்களும், 85பேருக்கு காது கேட்கும் கருவிகளும், 60பேருக்கு முதியோர் அடையாள அட்டைகளும், 35பேருக்கு சக்கர நாற்காலிகளும், 5பேருக்கு வெள்ளைப் பிரம்புகளும் வழங்கப்பட்டன என சமூக நலன்புரி அமைச்சின் செயலாளர் திருமதி ஜி.ஜெகராசசிங்கம் தெரிவித்தார்.

அத்துடன் சுயதொழில் முயற்சி கடன்வழங்குவதற்காக 500 பேரின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு பத்தாயிரம் ரூபா வீதம் பிரதேச செயலகங்கள் ஊடாக விரைவில் கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் 200 தையல் இயந்திரங்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவர்களுக்கும் விரைவில் தையல் இயந்திரங்கள் வழங்கப்படும்.

சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் 30 பேர் இணைந்துள்ளனர். அத்துடன் தெரிவுசெய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் 60 பேருக்கு இருநாள் பயிற்சிப் பட்டறையும் கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு உளவளத்துணைப் பயிற்சியும், 5 வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களின் வளர்ச்சி தொடர்பான பயிற்சிப் பட்டறையும் இந்த நடமாடும் சேவையின்போது நடத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-73)

# யாழ்.நகர மத்தியில் தேங்கும் கழிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்4

யாழ்.நகரின் மத்தியில் உள்ள வீதிகளில் நடைபாதை வியாபாரிகள் கைவிட்டுச் செல்லும் கழிவுப்பொருள்கள் தேங்கியுள்ளன. இதனால் சுகாதாரக் கேடு உருவாகியுள்ளது.

நகரப் பகுதியில் தற்போது தென்னிலங்கையில் இருந்து வந்த பலர் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டுவருகின்றனர் அத்துடன் தென்னிலங்கையில் இருந்து தாராளமாக வரும் அன்னாசி மற்றும் அப்பிள் போன்ற பழ வகைகள் நகரக் கடைகளில் பெருமளவில் குவிந்துள்ளன. கோழிக்குஞ்சுகளும் நடைபாதையோரத்தில் விற்கப்படுகின்றன.

இந்த நிலையில் பழக் கழிவுகள், பொருள்கள் அடைத்து வரும் பெட்டிகள், கோழிக்குஞ்சுகளின் எச்சங்கள் உட்பட பல கழிவுப்பொருள்கள் வியாபாரிகளால் வீதிகளில் வீசப்படுவதாகவும் -

இதனால் வீதியோரங்களில் பெருமளவு கழிவுப் பொருள்கள் சேர்வதுடன் அவை கழிவு நீர் வடிகால்களை அடைத்து விடுவதால் கழிவுநீர் தேங்கிச் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்துவதாகவும் - கூறப்படுகிறது.

யாழ்.மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் பணி நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், நகர வீதிகளில் இவ்வாறு தேங்கும் கழிவுகளை அகற்ற மாநகராட்சி நிர்வாகம் உடனடியாக மாற்று நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் கோருகின்றனர். (ஒ-12)

# 2-ரீ ஒயிலுக்கு தட்டுப்பாடு

கொக்குவில்,ஜூன்4

குடாநாட்டில் 2-ரீ ஒயிலுக்கு (2T oil) பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. எரிபொருள் நிரப்பு நிலையங்களிலோ தனியார் விற்பனை நிலையங்களிலோ ரின்னில் அடைக்கப்பட்ட சுத்தமான 2ரீ ஒயிலை பெறமுடியவில்லை எனப் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். சில தனியார் விற்பனை நிலையங்களில் ரின்னில் அடைக்கப்படாத 2ரீ ஒயில் லீற்றர் 140 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

இந்த ஒயிலைப் பாவிக்கும்போது மோட்டார் வண்டிகள் அதிகளவில் புகைகக்குவதாகவும், விரைவில் எஞ்சின் பகுதியில் காபன் படிந்துவிடுவதாகவும் பாவனையாளர்கள் கவலை தெரிவித்தனர். (ம-62)

# படையினர் உடனடியாக விலக மறுப்பு

கொழும்பு,ஜூன்4

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கட்டடங்களில் இருந்து படையினர் உடனடியாக வெளியேறமாட்டார்கள் என்று யாழ்மாவட்ட படைததளபதி மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு தெரிவித்திருப்பதாக 'தமிழ்நெற்' இணையத்தளம் செய்திவெளியிட்டிருக்கிறது. (ஐ)

# ஈழத்தமிழரைப் புரிந்துகொள்வது இந்தியாவுக்கு நன்மை பயக்கும்

உலகத் தமிழரையெல்லாம் சமீபத்தில் மிகக் கவர்ந்தது இரண்டு விஷயங்கள்! ஒன்று: பிரபாகரன் நடத்திய உலகப் பத்திரிகையாளர் மாநாடு. மற்றையது: அதைக் கண்டு பொறுககாது பத்திரிகைகளைச் சாடிவிட்டுத் தன்னையும் உலகம் கவனிக்கவேண்டும் என்பதற்காக தமிழ் நாட்டில் ஜெயலலிதா நிறைவேற்றிய தீர்மானம்.

பாண்டுவின் மனைவிக்கு முதலில் பிரசவம் நடந்துவிட்டது என்பதற்காக இளையவளாகிய காந்தாரி, கருவுற்றிருந்த தன் வயிற்றை அம்மியால் மோதிக் குறைமாதத்தில் 101ஐப் பெற்றாளாம். வாழ்க பெண்மை!

அந்த நாட்டில் ஆயிரமாயிரம் பிரச்சினைகள்! அவற்றையெல்லாம் ஓரங்கட்டிவிட்டு படையை அனுப்பி 'பிரபாகரனைப் பிடி' என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது அந்தச் சட்டமன்றம்!

இது தமிழினத்தின் ஒட்டுமொத்தமான தீர்மானமல்ல; ஆளுங்கட்சியின் அவசரத் தீர்மானம்!

சிலர் கடும் 'எதிர்ப்புக் காட்டவும், சிலர் மௌனம் சாதிக்கவும் இந்தத் தீர்மானம் நிறைவேறியுள்ளது.

ஜெயலலிதாவின் கட்சியினர் தமகென ஒன்றில்லாதவர்கள். ஆதரவளித்த ஏனையோர் அடுத்த சமுதாயத்தைப் பற்றிக் கவலைப்படாத, அடுத்த தேர்தலை எண்ணிக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகள்!

எனவே, இந்தத் தீர்மானத்தை ஜனநாயகத் தீர்ப்பென்றோ, தமிழக மக்களின் ஒட்டுமொத்தக் கருத்தென்றோ நாம் கருதவேண்டியதில்லை. பாண்டிச்சேரியும் இப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றித் தன்னை மாசுபடுத்திக்கொண்டது.

நூறுகோடி மக்கள் வாழும் இந்தியாவில் ஆறுகோடி மக்கள் வாழும் தமிழ் நாட்டில் வேறு எந்த மாநிலமும் செய்யத் துணியாத தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

வேறு மாநிலங்களில் நிறைவேற்றப்பட்டிருந்தால் அதனை நாம் புரிந்துகொள்ளமுடியும்.

பச்சைத் தமிழரென பச்சைகுத்திக்கொண்ட தமிழர் நிறைவேற்ற - எதிர்க்கட்சியில் இருந்த பகுத்தறிவுப் பச்சோந்திகள் மௌனமாக ஆதரவளித்தனர். ஆம் - மௌனம் சம்மதம்தானே. 'நிறுத்தடா' என்று நிறுத்தவேண்டியவர்கள் - நெட்டை மரங்கள் என சட்டசபையில் நின்றார்கள். ஆனால், வைகோ போன்றவர்கள் மானம் காத்தார்கள்.

உடன்பிறந்தே கொல்லும் வியாதி என்பது நாம் அறியாததல்ல. ஆனால் புரூட்டஸ் - நீயுமா என எம்மால் வருந்தாமல் இருக்கமுடியாது.

இந்தத் தீர்மானத்தை இந்திய மத்திய அரசோ, ஏனைய மாகாண அரசுகளோ கவனத்திற்கு எடுக்கப்போவதில்லை! ஆனால், ஈழத்தில் ஏற்பட்டுவரும் சமாதானத் தீர்வுக்கு ஆதரவு தருவதுபோல நடிக்கும் தீய சக்திகளுக்கும் குழப்பிவிடத் துடிக்கும் துரோக சக்திகளுக்கும் இந்தத் தீர்மானம் மகிழ்ச்சி தரும் என்பதில் ஐயமில்லை!

தமிழக அரசியலைப் புரிந்தவர்களுக்கு இதில் ஒரு புதுமையும் இல்லை; ஒரு பொல்லாப்பும் இல்லை! ஈழத் தமிழராகிய நாம் தமிழகத்தைத் தாய் நாடாகவும் தமிழகத்தைத் தொப்புள்கொடி உறவினராகவும் கருதி வந்திருக்கிறோம்.

சுதந்திர இந்தியாவின் தமிழகத்தை ஓமந்தூரார், காமராஜர், ராஜாஜி, கக்கன், ஜீவா போன்றவர்கள் வழிநடத்தினார்கள். நாளடைவில் தன்னலவாதிகளின் கையில் தமிழ்நாடு சிக்கியது. காலத்தின் தேவையாகிய திராவிடத் தீயை சினிமா விசிறி வளர்த்தது. நடிகர்கள் நாட்டை ஆளத்தொடங்கினார்கள். அரசியல் நாடகமாயிற்று; சட்டசபை நாடக மேடையாயிற்று! அமைச்சர்களில் இருந்து அலுவலகப் பையன்வரை எல்லோரும் சினிமா நடிகர்போல உடையணிந்து, நடை நடந்து வசனம் பேசுகிறார்கள்.

கருணை என்னிடம் (கருணாநிதி), நிதி மதியிடம் (மதியழகன்) இருக்கிறது என்பார் கருணாநிதி. அதற்குப் பலத்த கைதட்டல். 'ஜானகி அம்மை யாரைப் பார்த்தால் கும்பிடவேணும் போல் இருக்கிறது. ஜெயலலிதாவைப் பார்த்தால் கூப்பிடவேணும் போல இருக்கிறது' என்பார் ஓர் அமைச்சர். அதற்கும் கைதட்டல். தமிழக அரசியல்வாதிகளின் நாடகத்தை ஆறு கோடி தமிழர்களும் இரசித்திக்கொண்டிருக்கிறார்கள்.

கொடூரமான பாலியல் வக்கிரகங்களையும், கொலை, கொள்ளை போன்ற கொடூரங்களையும், நகைச் சுவைத் துணுக்குகளாக, விகட சித்திரங்களாகவும் வெளியிட்டு தமிழக ஊடகங்கள் கலை வளர்த்து வருகின்றன. யார் இடையழகி? யாருடைய பார்வையில் காமம் கொப்பளிக்கிறது? யாருடைய இதழில் சிற்றின்பத் தேன்

## அமைதிப்படையின் அட்டூழியத்துக்கு பொறுப்பேற்கப்போவது யார்?

அதிகம்? இந்த வினாக்களுக்குப் பதில் அளிப்பவர்களுக்கு தமிழகப் பத்திரிகைகள் பரிசளிக்கின்றன. எல்லாமே கலைத் தொண்டு.

சிற்றினத்தாரின் ஆட்சிச் சீர்கேட்டை நாம் நேரில் பார்க்கிறோம். பெரியாரும், ராஜாஜியும் சினிமா முதல எதிரியென்றார்கள். எதுவும் எடுபடவில்லை!

ஈழத்தவராகிய நாமும் தமிழர்தான் நமக்கும் அவர்களுக்கும் தொப்புள்கொடி உறவுண்டுதான்! ஆனால் நாம் பழந்தமிழர்; பழுதுபடாத தமிழர்! பழந்தமிழர் போற்றிய தூய வீரமும், காதலும் இன்னும் நம்மிடம் வாழ்கின்றன. தமிழகத்தில் மருமகளுக்கு மாமி இயமன்! இங்கு மருமகள், மகனை மருவிவந்த ஒரு மகள். அங்கு சாமிமார் மாமிமாரைத் தேடுகிறார்கள்! இங்கு தூய துறவிகள் செல்லப்பர் சுவாமி, யோகர் சுவாமி, விபுலானந்த அடிகள்.

தூய நைத்திகப் பிரம்மச்சாரியத்துக்கு ஆறுமுகநாவலர், பண்டிதமணி, அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி போன்றோர் உதாரணங்கள்.

நடிகர்களால் ஆளப்படும் மக்களும் நடிக்கத் தொடங்கிவிட்டார்கள்!. அதனால் நடிக்கத் தெரியாத ஈழத் தமிழரை அவர்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை; அங்குள்ள கொடூரங்களை ஈழத்தமிழரால் நம்ப

**வித்துவான் க.ந.வேலனின்**
**மனம்திறந்த செவ்வி**
***நன்றி: 'புதினம்'***

முடியாதிருப்பதுபோல நம்மவரின் தூய்மையையும் அவர்கள் சந்தேகிக்கிறார்கள்.

நடிக்கத் தெரியாதவர்கள் அங்கு ஆட்சிக்கு வரமுடியாது! அதனால் பழ.நெடுமாறன் போன்றோரால் என்றும் தனித்து ஆட்சி அமைக்கமுடியாது.

நாம் அவர்களைப் புரிந்துகொள்கிறோம்; ஆனால் அவர்கள் என்றும் நம்மைப் புரிந்துகொள்ளப் போவதில்லை! நமக்குத்தான் நடிக்கத் தெரியாதே!

நடிப்பைக் குலத்தொழிலாகக் கொண்ட நடிகை ஜெயலலிதா, கருணாநிதியைக் கைதுசெய்த வில்லித்தனத்தால் அகில இந்தியாவையும் அதிரவைத்தார்! இப்போது 'பிரபாகரனைக் கைதுசெய்' என்ற அதிரடித் தீர்மானத்தால் அகில உலக வில்லி நடிகையாகிவிட்டார். மக்களைத் தன்பக்கம் திருப்புவது தானே நடிகனின் நோக்கம். ஜெயலலிதா அதைச் சாதித்துவிட்டார்.

அமெரிக்கா பின்லேடனைக் கைதுசெய்ய முயன்றதுபோல தாமும் பிரபாகரனைக் கைதுசெய்ய வேண்டும் என்கிறார் ஜெயலலிதா. அமெரிக்கா ஆயிரக்கணக்கான அப்பாவி ஆப்கானியர்களைக் கொன்றும் கோடிக் கணக்கான அவர்களின் சொத்துக்களை அழித்தும் அவர்களின் எண்ணம் ஈடேறவில்லை. அதுபோல, இலங்கை மீது படை எடுத்து அப்பாவிகளைக் கொன்று, சொத்துக்களை அழித்து, இதைத்தானே அமைதிப்படை செய்தது; இலங்கை இராணுவமும் செய்தது. பிடிக்க முடிந்ததா?

பின்லேடனின் போராட்டம் மத வெறி; பிரபாகரன் போராட்டம் இன விடுதலை. அதன் அடித்தளம் 'என் மதம்' என்ற உணர்வு. இது 'எனது மக்கள்' இன்னும் மனிதாபிமான உணர்வு. இரண்டும் வெவ்வேறு! அமைதிப்படை என்ற பெயரோடு ஈழத்துக்கு வந்த இந்தியப்படை 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழரைக் கொன்று, பல்லாயிரத்தினரை ஊனமாக்கி பன்னூறு மகளிரைக் கற்பழித்து, பல கோடி சொத்துக்களை அழித்தும் கொள்ளையடித்தும் சென்றுள்ளது.

தனது படையில் ஆயிரத்திற்கு மேற்பட்டோரை இழந்து, பல்லாயிரம் வரை ஊனமாக்கி, இந்தியாவின் பெரும்பணத்தை வீணடித்து, வந்த நோக்கத்தை நிறைவேற்றாமல் அவமானத்தோடு திரும்பியது.

இந்தத் துக்ககரமான செயலுக்கு சிகரம் வைத்தாற்போல், ராஜீவின் மரணம் நிகழ்ந்தது. ஆனால், எல்லா இழப்புக்களையும்விட ராஜீவின் இழப்பே பெரிதாகப் பேசப்படுகிறது. அதற்குக் காரணம் இருக்கிறது. ஒட்டுமொத்த தனிப்பட்ட உணர்வே காரணம்!

ராஜீவ் கொலையுண்ட கோரக் காட்சியை இந்திய இதழ்கள் இந்நேரம் வெளியிடுகின்றன. அமைதிப்படை நம்மவரைக் கொன்று சிதைத்த கோரக்காட்சிகளைக் காட்டும் பல்லாயிரக்கணக்கான படங்கள் நம்மிடம் உள்ளன.

ராஜீவ் பிறப்பாலும், வளர்ப்பாலும், வாழ்வாலும் ஒரு கனவான். மெல்லிதயம் படைத்தவர், அரசியல் பின்னணி உடையவராயினும் இந்திய அரசியல் அழுக்கை அறியாதவர்.

இத்தகையவரை, இந்தச் சூழ்ச்சியில் மாட்டிவிட்டவர் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். "உன் தாத்தா நேரு, அவர் தந்தை மோதிலால் நேரு" எல்லாம் என் மதிப்பிற்குரிய நண்பர்கள். நாமும் வட இந்தியாவில் இருந்து சென்ற ஆரியர், நீ! எனக்கொரு பேரன். எனது இக்கட்டான இந்த நிலையில் நீதான் உதவ வேண்டும். என்ற ஜே.ஆரின் வேண்டுகோளை ராஜீவால் தட்டிக்கழிக்க முடியவில்லை. அங்குள்ள 'ஜலாராக்கள்' உசுப்பிவிட்டனர். ஆக - 2 ஆயிரம் பெடியள் கொஞ்சத் துவக்குகள், படிப்பறிவோ, வேறு பின்னணியோ இல்லாதவர்கள் 24 மணித்தியாலத்தில் முடிந்துவிடும். இது போன்ற தூபம் போடப்பட்டது.

இந்திய அமைதிப்படையின் செலவை ஏற்குமாறு இந்தியா கேட்டபோது, அதனையும் ஜே.ஆர். தந்திரமாகத் தட்டிக்கழித்துவிட்டார்.

ஈழத்தமிழருக்கு உணவுத் தடை விதித்த நேரத்தில், கப்பல் மூலம் உணவு வழங்க இந்தியா முன்வந்தபோது இலங்கை அரசு தடுத்தது. தடையை மீறி யாழ்.வான்வெளியில் உணவுப் பொட்டலங்களைப் போட்ட ராஜீவ் 'இது அல்லலுறும் தமிழ்மக்களுக்கு உதவி **At the same time is a Message to the Srilanka Government** - என ஒரு கோடு போட்டதை ஈழத் தமிழர் ஒருபோதும் மறக்க மாட்டர்! இத்தகைய உறுதியோடு இருந்த ராஜீவ், திசைமாறித் தமிழரை அழிக்கத் துணிந்த காரணம் என்ன? படை, படைதான்! உலகில் அமைதிப் படை என ஒரு படை உண்டா? படை என்றால் ஆயுதம்தான்! ஆயுதம் இல்லாதது படையா? கையில் ஆயுதம் ஏந்தியவன் அமைதியாக இருப்பானா?

அமைதிப்படைத் தம்மைக் காக்க வந்ததெனத் தமிழர்கள் நினைக்க, சிங்களவர் தம்மைக் காக்க வந்ததென நினைக்க, என்னசெய்வது என ஒரு குறிக்கோளும் - வழிகாட்டலும் இன்றி, இந்தியப் படை இடை நடுவில் தடுமாறி விழிக்க - போர் தொடங்கிவிட்டது! இப்போது அமைதி காத்து, பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லையே, அப்போதே 'நாம் வந்தது அமைதியாகப் பிரச்சினையைத் தீர்க்க - போரிட அல்ல' என உறுதியாகக் கூறிவிட்டு கௌரவமாகத் திரும்பவேண்டியதுதான் ராஜீவின் கடமை. அதனை அவர் செய்யவில்லை. ஆலோசனை கூறிய வெங்கடேஸ்வரன் போன்றவர்களையும் புறக்கணித்துவிட்டார்.

ராஜீவ் ஈழத்தமிழர் பிரச்சினையை அறியாதது மட்டுமல்ல, தவறான வழிகாட்டிகளைத் துணையாக்கினார். அதன் விளைவே அமைதிப்படை காலத்தில் நேர்ந்த அனர்த்தங்கள். அவற்றிற்குத் தேசத்தின் தலைவர் என்ற வகையில் ராஜீவே பொறுப்பை ஏற்கவேண்டும். எனவே ராஜீவின் மரணத்திற்கு யார் காரணம்?

உணர்ச்சிவசப்படாமல் - தெளிவாகச் சிந்திப்பவர்களுக்கு உண்மை புலப்படும்.

தமிழ்நாட்டுச் சட்டசபை 'பிரபாகரனைப் பிடி' என்கிறது. தமிழக ஊடகங்களில் செல்வாக்குள்ள சில பிரபாகரனை மன்னிப்புக் கேட்க வேண்டும் என்கின்றன. உண்மையில் யார் முதலில் மன்னிப்புக் கேட்கவேண்டும். ஈழத்தில் தாம் நடத்திய கொடுமைக்கு இந்தியா இதுவரை மன்னிப்புக் கேட்டதுண்டா? வருத்தம் தெரிவித்ததுண்டா? ஊடகங்கள் அதைப்பற்றி சிறிதாவது சிந்தித்ததுண்டா? பிரபாகரன் தன் மனவருத்தத்தைத் தெரிவித்துவிட்டார்.

இது வெறும் நடிப்பல்ல. வார்த்தை ஜாலங்களைக் கேட்டுப் பழகிய இந்தியர்களுக்கு இது திருப்தி தராது!

மனிதாபிமானத்தால் உள்ளம் உருகி, மக்கள் துயர் தீர்க்க துப்பாக்கி ஏந்திய போராளி பிரபாகரன். தளபதிகளின் மரணத் துக்கத்தையும் 'சலூட்' அடித்துத்தான் தெரிவிப்பார்கள். புலிகள் கத்திக் கதறி மாரடிக்க மாட்டார்கள். அவர்கள் பாஷை இராணுவ பாஷை. அதுவே பிரபாகரன் பாஷை. அதைப் புரிந்து கொள்வது எமக்கு மாத்திரமல்ல - இந்தியாவுக்கும் நல்லது. ஏனெனில், இந்தியாவோடு தரையால் ஒட்டியிருக்கும் பாகிஸ்தானைவிட, வங்காள தேசத்தைவிட, ஈழம் உணர்வால் ஒட்டியிருக்கிறது. ☆

---

## மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றனர்

### புத்தூரில் வயோதிபமாதுவுக்கு ஏற்பட்ட அவலம்

அச்சுவேலி,ஜூன்4

வயோதிப மாது அணிந்திருந்த 15ஆயிரம் ரூபா பெறுமதியான பவுண் சங்கிலியை பட்டப்பகலில் மோட்டார்ச் சைக்கிளில் வந்தவர்கள் அறுத்துக் கொண்டு ஓடித்தப்பினர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணியளவில் புத்தூர் 10ஆம் கட்டையில் நடைபெற்றுள்ளது.

திருமதி வேலுப்பிள்ளை விக்கினேஸ்வரி (வயது70) என்ற வயோதிப மாது வீதியோரத்தில் நின்றபோது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பெண்மணியின் உறவினர் ஒருவரை விசாரித்தனர் என்றும் -

அவரை அழைப்பதற்கு குறிப்பிட்ட பெண்மணி வீட்டுப்பக்கம் திரும்பிய போது மோட்டார்ச் சைக்கிளில் வந்தவர்கள் அவரின் கழுத்தில் இருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடித்தப்பினர்.

பட்டப்பகலில், பிரதான வீதியில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி அச்சுவேலி பொலீஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. (எ-11)

## யாழ். மருத்துவமனையில் உள்ளக தொலைபேசி பழுது

யாழ்ப்பாணம்,ஜூன்4

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ளகத் தொலைபேசி இணைப்பு செயற்படாததால் வெளியிடங்களில் இருந்து சிகிச்சை விடுதிகளுக்கோ, மருத்துவமனைக்குள் ஒரு பிரிவிலிருந்து மற்றைய பிரிவுகளுக்கோ தொடர்பு கொள்ள முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் வார்ட்டுகளில் தங்கிச் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் மற்றும் அவர்களுக்கு உதவியாகத் தங்கியுள்ளோருடன், நோயாளிகளின் உறவினர்கள் அவசரத் தேவைகளுக்காகத் தொடர்புகொள்ள முடியாதுள்ளதாகவும் -

அவசர சிகிச்சை போன்ற காரணங்களுக்காக மருத்துவர்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்புகொள்ளச் சிரமப்படுவதாகவும் -

மருத்துவமனை வட்டாரங்கள் கூறின.

யாழ்.மருத்துவமனையில் ஐம்பத்துக்கும் மேற்பட்ட உள்ளக தொலைபேசி இணைப்புகள் உள்ளன. இவற்றை ஒருங்கிணைக்கும் கருவி பழுதடைந்துவிட்டதாலேயே உள்ளக தொடர்புகள் துண்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3-15-139-175)

## நீர்ப்பாசனத்தைச் சீர்ப்படுத்த யாழ்.மாவட்டத்தில் 10 திட்டங்கள்

கொக்குவில்,ஜூன்4

வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் இந்த ஆண்டிற்கான 10 வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

வேலணை பெரிய குளம், பொன்னாலை பெரிய குளம், நவாலி வேடுவன் கண்டி குளம், புலோலி கவடுவிராய் குளம், இருபாலை செம்மணிக் குளம், கப்புது நெடுங்கிராய் குளம், வரணி தம்பாலைக் குளம், ஊர்காவற்றுறை சாம்பலோடை மற்றும் மெலிஞ்சிமுனை உவர் நீர்த்தடுப்பணைகள், சரவணை உவர் நீர்த் தடுப்பணை ஆகியவை இந்தத் திட்டங்களின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன.

(ஒ-13-ரி)

# பண்டைத் தமிழனின் புலமைக்கு சான்றாக விளங்கிய புலவர் பெருமக்கள்

**"பண்டைத் தமிழரின் பண்பாட்டு விழுமியங்களும் பரந்துபட்ட அறம் தழுவிய செயற்பாடுகளும்" என்ற தலைப்பில் வெளியாகிவரும் தொடர்கட்டுரையின் மற்றொரு பகுதி இன்று பிரசுரமாகின்றது.**

*'இயல்பினான் இல்வாழ்க்கை*
*வாழ்பவன் என்பான்*
*முயல்வாருள் எல்லாம் தலை'*
*(குறள்)*

முறைப்படி இருந்தோம்பி இல்வாழ்க்கை வாழ்பவன், தவஞ்செய்வோர் எல்லோரிலும் தலைசிறந்தவனாவான். சிறு வீடுகளில் அமைதியும் இன்பமும் இல்லையானால், பெரிய நாட்டிலும் குழப்பமும் துன்பமும் மிகும். இந்த உண்மையை உணர்ந்தே தமிழ்ச் சான்றோர், இல்லறம் அல்லது நல்லறம் இல்லை என்று போற்றி அதனை நடத்தும் இருவரையும் தலைவன், தலைவி எனப் புகழ்ந்து பாராட்டினர்.

### புலவர் பெருமக்கள்

புறவாழ்வைப் போற்றிப் பாடிய புலவர்கள் அகவாழ்வையும் பாடிப் பயன் தூக்கினர். அச்சான்றோர் கண்ட கனவுகள் ஏராளம். அவற்றுள் நாட்டைப் பற்றி அவர்கள் நினைந்தவை இன்றும் உலகில் நிறைவாகவில்லை. காரணம், நாடுதிருந்துவதற்குக் காரணமான வீடு திருந்தாமையே ஆகும். குறுங்கோழியூர்க்கிழார், திருவள்ளுவர், பரணர், கபில், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் போன்ற புலவர்கள் அருள் நெறிக்குத் தோற்றுவாயாய்; அன்பு வாழ்விற்கு அடிப்படையாய் அமைந்த இல்வாழ்க்கையைப் பற்றிச் சிறப்பித்துப் பாடியுள்ளனர்.

### இல்லறத்தை வலியுறுத்திய புலவர்கள்

வீட்டு வாழ்க்கை திருந்த வேண்டுமென்பதே தமிழ் நாட்டு அறவோர் எழுதிய அறநெறிச் சாசனங்களுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்த கொள்கையாகும். இல்வாழ்க்கை உண்மையாகவே சிறந்து விளங்க வேண்டுமாயின், நாட்டின் ஆட்சிமுறை நன்னெறிப்பட்டதாக விளங்க வேண்டும். உலகம் வாழ வேண்டும் என்னும் பரந்த நோக்கமாகிய அருள் ஒரு



குழந்தை என்றும்; தொடர்புடையார் மாட்டுத் தோன்றும் அன்பு அதன் தாய் என்றும், அத்தகைய அன்பு, அறத்தின் அடிப்படையில் இல்வாழ்க்கை நெறியில் வாழ்க்கைத் துணைநலம் அமைந்து, மக்கட்பேறு வாய்த்த பின்னரே படிப்படியாக வளர்ந்தோங்கி அருளாய் மாறி நிற்பதென்றும் அருந்தமிழ்ச் சான்றோர் தெளிவாக்கினர்.

'சோறு படுக்குந் தீயொடு
செஞ்ஞாயிற்றுத் தெறல் அல்லது
பிறிது தெறல் அறியார் நின்
நிழல் வாழ்வோரே
திருவில் அல்லது கொலைவில்
அறியார்
நாஞ்சில் அல்லது படையும்
அறியார்
வயவுறு மகளிர் வேட்டுணின்
அல்லது
பகைவர் உண்ணா அருமண்ணி
னையே'
(புறம்20)

ஒரு நாட்டில் சோறு சமைக்கும் தீயும், செஞ்ஞாயிற்றின் வெப்பமும் தவிர வேறு தீயும் வெப்பமும் புகுந்து மக்களை வருந்தலாகாது என்று மேலுள்ள பாடலிலே குறுங் கோழியூர் கிழார் விரும்பினார். நாட்டு மக்கள் கண்ணில் வானவில் காணப்பட வேண்டுமே அன்றி கொலைவில் தோன்றலாகாது எனவும் விரும்பினார். வில், வாள் முதலிய படைகள் அறவே ஒழிந்து, கலப்பை ஒன்றே படை என்னும் பெயர் பெற்று நிலவும் நற்காலத்தைக் கனவில் கண்டார். கருக்கொண்டு வயாவுற்ற மகளிரே மண் உண்ணும் வேட்கை கொள்ள, ஆளும் அரசர் மண்ணாசை கொண்டு மக்களை அலைக்கும் போர்த்துன்பம் ஒழிந்து நல்லுலகைக் கற்பனையில் கண்டார். இப்பாடல்களில் பொதிந்துள்ள பொருள்களை, இக்கால மாணவர்கள் தெரிந்து கொள்வது கடினமாகும். இத்தமிழ் நடையின் நனி சுவையையும், பெறுமானத்தையும் முனைந்து கற்றல்தனிநலம் பயக்குமென்பதாலேயே அதன் ஒரு சுவை அலகை இங்கே காட்ட முனைந்துள்ளேன்.

**இக்கட்டுரை பழந்தமிழ் இலக்கியங்களோடு ஒரு பயில் பண்பை ஏற்படுத்துவதற்கான முயற்சியாகும். திறமான புலமைகளை பண்டைய இலக்கியங்களில் தேடிச் சுவைக்கும் திறன் அருகிவரும் தற்காலக் கல்வியியற் போக்கில் ஓர் உயர்வான மீட்டலை இவை கொண்டுவரும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.**

### ஊருக்கு இன்பம் அளித்தலே வாழ்வின் பயன்

கடையேழுவள்ளல்கள் உணர்வே உருவாய பெருமக்கள். ஊர்க்கெல்லாம் இன்பம் செய்தலே வாழ்வாக வாழ்ந்தவர்கள் பாரி, ஓரி, காரி, அதியமான், ஆய், நள்ளி, பேகன் என்ற இவர்களுள், பேகனின் கை வண்மையைப் புகழ்ந்தவர் பரணர் என்ற புலவர். "எவ்வளவு இயலுமோ அவ்வளவு ஈதல் நல்லதே என்பதே பேகன் கோட்பாடு. அவன் வண்மை மறுமை நோக்கியது அன்று; பிறர் வறுமை நோக்கியதே ஆகும்" என்று சிறப்பித்தார்.

'உடா அ போரா ஆகுதல் அறிந்
தும்
படா அம் மஞ்ஞைக் (கு) ஈத்த
எங்கோ
கடா அ யானைக் கலிமான்
பேகன்
எத்துணை ஆயினும் ஈத்தல்
நன்றென
மறுமை நோக்கின்றோ அன்றே;
பிறர் வறுமை நோக்கின்(று)
அவன் கை வண்மையே'
(புறம்141)

இத்தகைய வாழ்வு வாழ்ந்த பேகனிடம் ஒரு குறை வந்துற்றது. அது அவனது இல்லத்திற்கு இழுக்குத்தரும் குறையாய் ஓங்கி நின்றது. அதை நினைந்து நினைந்து கபிலர், பரணர் என்னும் செந்நாப்புலவர்கள் வருந்தினர். ஏனைய அரசில் கிழார், பெருங்குன்றூர் கிழார் போன்ற புலவர்களும் கவலை அடைந்து பேகனிடம் சென்று தத்தம் மனத்துயரை எடுத்துரைத்தனர். புலவர் மனத்துயருக்குக் காரணம் பேகனது இல்வாழ்கையில் நேர்ந்த இழுக்கேயாகும். மயிலின் துன்பம் என எண்ணி அதைத தீர்க்கும் பொருட்டுத் தன் படாத்தினை அதற்கு ஈந்த அருளாளன்,தன் வாழ்க்கைத் துணைவி வருந்தக் கைவிட்டு வேறொருத்தியோடு வாழ்வானாயினான்.

### பாடல்பாடுவதை உயிராகக் கருதிய புலவர்கள்

கண்ணகி என்னும் பெயர் வாய்ந்த அத்துணைவியோ, கண்ணீர் சொரிந்து நைந்து அழுவாளாயினள். இந்நிலை



யினை உணர்ந்த புலவர்மனம் கலங்கிற்று. பேகனை நாடிச் சென்று தம் மனத்துயரை எடுத்துரைத்தனர். கபிலா பேகனை நோக்கி 'கை வண்மை சான்ற பேக! நேற்று அரு வழி நடந்து, வருந்தி வந்த சுற்றத் தின் பசியைப் போக்க வேண்டி, உன்சிற்றூர் எய்தி உன் வாயிலில் வாழ்த்திநின்றேன். உன்னையும் உன் மலையையும் பாடினேன். அதனைக் கேட்ட உடனே, துன்பம் மிகுந்து கண்ணீர் சொரிந்து, அதனை நிறுத்தவும் ஆற்றாளாய், விம்மி, விம்மி மிக அழுதாள். அவளது அழுகுரல் குழலின் துயர் போல இருந்தது. அவள் யாரோ? இரங்கத் தக்கவளாய் இருந்தாள்' - என்றார்.

நாக.சண்முகநாதபிள்ளை

தன் கணவன் வேறொருத்திபாற் செல்ல ஏற்பட்ட துயரமே கண்ணகியை விம்மி விம்மி அழச் செய்தது என்பதைப் பேகனுக்கு மறைமுகமாகக் கபிலர் உணர்த்தினார். உன்னையும் உன் மலையையும் பாடக்கேட்டதும் அவள் அழுதாள் என்றால் அவள் உன் மனைவியாகத் தான் இருக்கவேண்டும். அவள் அழுததற்குக் காரணம் 'உன்னால் துறக்கப் பட்டமையே' எனக் குறிப்பால் புலப் படவைத்தார் கபிலர். பரனரும் கண்ணகி காரணமாக இரண்டு பாடல்கள் பாடித் தம் கருத்தை வெளிப் படையாக்கினார்.

'அருளாளா! நீ அருளை மறந்தது கொடுமை' என்றார். பேகன் அளித்த பரிசிலையும் ஏற்காதவராய் 'மணி ஒலிக்கும் நெடுந்தேர் ஏறிச் சென்று துன்புருவாய் வாழும் உன் துணைவியின் துயர்களைந்தருள்க. இதுவே யாம் இரக்கும் பரிசில்' என்றார். இவ்வாறே அரிசில் கிழார் என்ற புலவரும் பேகன் அளித்த பரிசிலை மறுத்து, கண்ணகியின் துயரைப் போக்கி அன்பு செய்யுமாறு வேண்டினார். பெருங்குன்றக் கிழாரும் அவ்வாறே வற்புறுத்தினார். இப்புலவர் பெருமக்கள் அனைவரும் பேகன் இழைத்த பெருங் குற்றத்தை நயமான முறையிலும் - தெளிவான வகையிலும் - கரவாமல் எடுத்துரைத்த திறம் போற்றத்தக்கது. நல்வாழ்க்கை உடையவர் தரும் பொருளையே நற்புலவர் விரும்பிப் பெற்றனர். ஏனையோரின் செல்வத்தை அவர் மதித்தார் அல்லர்.

### உண்மைப் புலமை

உண்மைப் புலமை என்பது என்பது மக்களுக்குரிய நற்பண்புகள் பலவும் விளங்குமிடத்தே வாழ்வது என உணர்வோமாகுக. அந்தப் புலமைக்கு பண்டைத் தமிழகத்தில் பஞ்சமே இருக்கவில்லை. அதுவே தமிழ் மொழியின் நலமாகவும் - பலமாகவும் - இன்றுவரை நிலைத்துள்ளது.

*'எவ்வழி நல்லது வீடு அவ்வழி நாடும் உலகமும் வாழுமே'.* ☆

# பிரிந்து செல்லக்கூடிய சுயாட்சியே தமிழ் - சிங்கள உறவுக்கு ஒரேவழி

தற்போது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் புரிந்துணர்வுக்கு முழுமையான காரணம் கிரக நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றமே.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபோது ஜே.ஆரிடம் நிருபர்கள கேட்ட கேள்விக்குப் பதில் அளித்த போது 'கிரக நிலையில் ஏற்பட்ட மாற்றமே இந்த ஒப்பந்தத்துக்குக் காரணம்' என்றார். அத்தகைய ஒரு நிலையே இப்போதும் உள்ளது.

## ஜூலைமுதல் ஒரு வருடத்துக்கு இரு தரப்புக்கும் கடுங்காலம்

இலங்கை அரசின் இராசி துலாம. இது சரசசோதி மாலை என்ற சோதிட நூலில் 'தூக்கம் குறுகிய சிங்களம்' எனக் குறிப்பிடபபட்டுள்ளது. தூக்கம் - துலாம். அதன்படி இலங்கையின் ராசி துலாம். தமிழ்மக்களின் ராசி தனு.

இதன்படி - (அட்டவணையைப் பார்க்க)

இந்த அமைப்பினால் இலங்கைச் சிங்கள, தமிழ்மக்கள் மிக நெருக்கமான ஓர் உணர்வுடன் வாழ்வது நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல. ஒத்துவராத தம்பதிகளுக்கு விவாகரத்து எவ்வளவு வரப்பிரசாதமாக அமைந்துள்ளதோ அவ்வாறே பிரிந்து செல்லக்கூடிய ஒரு சுயாட்சியே இலங்கையில் இன உறவைப் பேணுவதற்கு உள்ள ஒரேயொரு வழியாகும். அல்லாமல் எடுக்கும் எந்த சமாதான முயற்சியும், நீறுபூத்த நெருப்புப்போன்று இருந்து பின்னர் மீண்டும் யுத்தநிலையை உண்டு பண்ணலாம்.

ஜூன் முதலாம் திகதியுடன் இலங்கை அரசுக்கு அட்டமத்துச் சனியுடன் 10இல் வியாழன். விடுதலைப் புலிகளுக்கு 6இல் சனி. அட்டமத்து வியாழன். எனவே, இந்த நிலை இரு சாராருக்கும் ஒரு வருடகாலம் நல்லதல்ல.


ஜூலை முதலாம் திகதியுடன் ஏற்படும் வியாழ மாற்றத்தினால் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே உள்ள உறவில் விரிசல்கள் ஏற்படுவதற்கான சம்பவங்கள் இடம்பெறலாம். எனவே, இரு பகுதியினரும் விதியின் வலிமையை உணர்ந்து பொறுமையைக் கடைப்பிடித்தால் பாதிப்புகள் குறைவடையும்.

வரப்போகும் வியாழ மாற்றம் இரு பகுதியினருக்கும் நன்மையானது அல்ல. ஜூலை மாதத்தின் பின் ஒரு வருட காலம் தமிழ்மக்களுக்கு - தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகச் செயற்படும் புலிகளுக்கு - மனத் தாங்கல்களான சம்பவங்களை உண்டுபண்ணலாம். அதேவேளை, இலங்கை அரசுக்கும் தற்போது உள்ள நன்மைகள் குறைவடைய வாய்ப்புக்கள் உண்டு. அரசமாற்றம் அல்லது பதவியில் உள்ளவர்களிடையே மாற்றம் ஏற்படலாம். மொத்தத்தில் ஜூலை முதலாம் திகதியின் பின் ஒரு வருட காலம் அரசுக்குப் பெரும் சோதனைக்குரிய காலமாகவே அமையும் தன்மை உண்டு. அரசு தன் பதவிக் காலத்தைப் பேணிக் காப்பாற்ற பெரும் சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

எது எவ்வாறு இருப்பினும், இரு பகுதியினரிடையேயும் இருந்து வருகின்ற புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பாதிப்பு ஏற்படுவதற்கான தன்மை இல்லை. அவ்வாறு ஏற்படின இலங்கை அரசே பெருமளவிலான பாதிப்புகளை எதிர்கொள்ளவேண்டியேற்படும். ☆

துளபகிரி சோதிடர்

| | தமிழ் இனம் - விடுதலைப் புலிகள் | சிங்கள இனம் - இலங்கை அரசு |
|---|---|---|
| இராசி | தனு | துலாம் |
| இராசிநாதன் | வியாழன் (தேவகுரு) | வெள்ளி (அசுரகுரு) |
| மூத்த சகோதரம் சத்துரு | வெள்ளி | .......... |
| இணை சகோதரம் சத்துரு | .......... | வியாழன் |




ஜூலை முதலாம் திகதி கிரகநிலை.

# அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தை மு.கா. எம்.பிக்கள் பகிஷ்கரிப்பு

காரைதீவு,ஜூன்4

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டத்திற்கு முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் சமுகமளிக்க வில்லை. அவர்கள் கூட்டத்தைப் பகிஷ்கரித்தனர் என்று கூறப்படுகிறது. தேசிய ஐக்கிய முன்னணித் தலைவி பேரியல் அஷ்ரப் எம்.பியும் கூட்டத் தில் கலந்துகொள்ளவில்லை.

கடந்த 10 மாதங்களுக்குப் பின் இக்கூட்டம் கடந்த வெள்ளியன்று முதல்தடவையாக அம்பாறைப் பிர தேசசபை அலுவலகத்தில் நடை பெற்றது. காலை 9 மணிக்குக் கூடிய கூட்டத்திற்கு ஒருங்கிணைப் புக் குழுத் தலைவர்களில் ஒருவரான சுகா தார அமைச்சர் பி.தயாரத்ன தலைமை தாங்கினார்.

அச்சமயம் தமிழர் கூட்டமைப்பு எம்.பி. அ.சந்திரநேரு மட்டுமே சமுக மளித்திருந்தார். அரைமணி நேரத்தின் பின் எம்.பிக்களான மையோன் முஸ் தபா, தேவாரப்பெரும ஆகியோர் சமுக மளித்தனர். சற்று நேரத்தில் சேகு இஸ் ஸதீன் எம்.பியும் சமுகமளித்தார்.

ஆயினும், அரைமணி நேரத்தில் இஸ்ஸதீன் எம்.பி. வெளியேறி விட் டார். மு.காங்கிரஸ் எம்.பிக் களான அமைச்சர் அதாவுல்லா, அன்வர் இஸ் மாயில், ஹரீஸ், ஆஸிஸ் ஆகியோர் சமுகமளித்திருக்கவில்லை.

ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைமைப் பதவி கிடைக்காததால் மு.கா. எம்.பிக்கள் கூட்டத்தைப் பகிஷ் கரித்தனர் என்று கூறப்பட்டது. (எ)

## மேலதிக சிகிச்சைக்கு இருவர் வந்தனர்

முல்லைத்தீவு போதனா வைத்திய சாலையில் இருந்து இருபெண் நோயா ளர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்டனர்.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த ராஜ் குமார் லீலாவதி (வயது 26), முள்ளிய வளையைச் சேர்ந்த சின்னையா கமல நாயகி (வயது 46) ஆகிய இருவரு வருமே யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க் கப்பட்டுள்ளனர். (ஒ-12)

## உடன்படிக்கை தொடர்பாக இன்று விவாதம்

கொழும்பு, ஜூன்4

அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான புரிந் துணர்வு ஒப்பந்தம் மீதான விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் நடை பெறும். புரிந்துணர்வு ஒப்பந்தம் உட் பட பல விடயங்கள் குறித்து ஒரு விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்றக் கட்சிகளின் தலை வர்களிடம் தமிழ் தேசிய கூட்ட மைப்பு கோரிக்கை விடுத்திருந்தது. இக்கோரிக்கையை அடுத்து விசேட விவாதம் ஒன்றை நாடாளுமன்றத்தில் இன்று நடத்துவதெனத் தீர்மானிக் கப் பட்டிருக்கிறது. (ஐ)


மருந்தகத்தில் வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை

தொடர்பு:
ஜனனி மருந்தகம்
ஆனைக்கோட்டைச் சந்தி. (4347)


# கட்டைபறிச்சானில் வாகனங்கள் கட்டாய பதிவு; மக்கள் விசனம்

மூதூர்,ஜூன்4

மூதூர் கிழக்கிற்குச் செல்லும் சகல வாகனங்களின் இலக்கங் களும் பதியப்பட வேண்டுமென கட் டைபறிச்சான் சோதனைச் சாவடி யில் பணிக்கப்படுகிறது. சகல வாக னங்களின் இலக்கங்களும் பதியப் பட்ட பின்பே பயணத்துக்கு அனு மதிக்கப்படுகின்றன. சமாதான உடன் படிக்கையின் பின் சோதனைச் சாவடி கள் அகற்றப்பட்டுக் கொண்டிருக் கின்றன. ஆயினும் கட்டைபறிச்சான் சாவடியில் மட்டும் புதிய நடை முறை அமுல்படுத்தப்படுவதேன் என்று பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (ஒ)


ரஷ்யாவில் மருத்துவக் கல்வி

சர்வதேச அங்கீகாரம் பெற்ற லுமும்பா பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்வி கற்க அனுமதி பெற்றுத்தரப்படும்.

| ஊடகம் | காலம் | செலவு/வருடத்துக்கு |
| --- | --- | --- |
| ஆங்கிலம் | 6 வருடம் | 4 லட்சம் |
| ரஷ்யமொழி | 7 வருடம் | 2 லட்சம் |

உடன் தொடர்புகொள்ளவும்.

காலை:
Dr.க.சிவனடியான
மூத்தவிநாயகர் கோவிலடி,
ஆனைக்கோட்டை. (4348)

மாலை:
யாழ் வீதி,
மானிப்பாய்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில் 06 - 05 - 1909

விண்ணில் 06 - 05 - 2002

### திருமதி இராமாசிப்பிள்ளை இராமநாதன்

தெள்ளு தவத்தால் எம்மைப் புவியில் பெற்றெடுத்து,
தேனமுதம் ஊட்டி இருகரத்தால் ஏந்தி,
கலையூட்டி, மதியூட்டி செல்வமெல்லாம் பெற்று
புகழ்விளங்க வழிகாட்டிய அன்னையே!
மண்ணில் வாழும் காலம்வரை விடிவெள்ளியாய்
வழிகாட்டும் அம்மா!

நாளை (05.06.2002) புதன்கிழமை கோவில்கடவை துன்னாலை மத்தியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெறவுள்ள 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வில் கலந்து, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

கோவில்கடவை,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

தகவல்:
இரா.சிவலிங்கம்
(பரு.இறங்குதுறை)

- பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(4300)

## நீங்கா நினைவில் ஆண்டுகள் நான்கு



மலர்வு 19 - 12 - 1920

உதிர்வு 19 - 05 - 1998

### அமரர் இராசரெத்தினம் சுந்தரமூர்த்தி

(தொண்டமானாறு)

(உரிமையாளர், சுந்தரமூர்த்தி அன்சன்ஸ், யாழ்ப்பாணம்)

திதி: 04-06-2002

ஆருயிர்த் தந்தையே! குடும்பத்தின் தெய்வமே!
அன்பூட்டி அறிவூட்டிய உங்கள் பிரிவில்
நெஞ்சங்கள் நிசப்தமாகி ஆண்டுகள் நாலானாலும்
நீங்கா நினைவில் என்றென்றும் எம்
உள்ளத்தில் நிலைத்திருப்பீர்கள்.

*உங்கள் ஆத்மசாந்திக்காக ஆண்டவனை வேண்டும்:*

*சுந்தரமூர்த்தி அன் சன்ஸ்,*
*210, ஆஸ்பத்திரி வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.*


மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

(4446)

*யே. ம. சூ. துணை*

## திருமண அழைப்பு

மணமகன்
**கிறிஸ்ரி வொலன்ரைன்**
(டல்லா)



மணமகள்
**அதிசய மலர்**
(மலர்)

அன்புடையீர்,

2002ஆம் வருடம் ஆனித் திங்கள் ஆறாம் நாள் (06.06.2002) வியாழக்கிழமை காலை 8.30மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் திருமணத் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து மணமகள் இல்லத்தில் நடைபெறும் மதியவிருந்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

"அருள் அகம்"
41, செல்லாச்சி அம்மையார் வீதி, சுன்னாகம். (4450)

திரு.திருமதி. அ.அருட்பிரகாசம்
(ஓய்வுபெற்ற ஆசிரியரும், பாரியாரும்.)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்ரபானு வருடம் வைகாசி மாதம் 23ஆம் திகதி (06.06.2002) வியாழக்கிழமை முற்பகல் 9.30 - 11.00 மணி வரையுள்ள அபரபக்ஷ ஏகாதசியும் ரேவதி நட்சத்திரமும் சித்தாமிர்தயோகமும் கர்க்கடக லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

எமது திருநிறை செல்வன்
**மோகனராஜ்**
அவர்களுக்கும்



எமது திருநிறை செல்வி
**ஜானகி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு பருத்தித்துறை சவனாய் முதல்வி அம்மன் ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து மணமகள் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:*

நிரந்தர முகவரி:
நவாலி வடக்கு,
மானிப்பாய்.
(4228)

தற்காலிக முகவரி:
**திரு.திருமதி கு.திருஞானசம்பந்தர்**
அரசடி ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

**திரு.திருமதி ந.சுப்பிரமணியம்**
பெருவெட்டி ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

(இருவீட்டார் அழைப்பு)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்ரபானு வருடம் வைகாசி மாதம் 22ஆம் நாள் நாளை (05.06.2002) புதன்கிழமை காலை 8.49 மணிதொடக்கம் 10.45 மணிவரையுள்ள உத்திரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்,

எமது புத்திரன் திருநிறை செல்வன்
**ரவி.வர்மன்**
(போட்டோ ரவீ அன் வீடியோ, யாழ்.)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**பிரியா**
அவர்களுக்கும்

திருவேங்கடவன் திருவருள் துணைகொண்டு, ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:*

திரு.திருமதி தே.சோமசுந்தரம்,
139, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

திரு.திருமதி பு.கனகலிங்கம்,
595, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.

*★இவ் அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

(இருவீட்டார் அழைப்பு)

(4350)

# சீரற்ற பஸ் சேவைகளால் தென்மராட்சி மக்கள் சிரமம்

## மாணவர்களுக்கோ பெரும் கஷ்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்4

இடம்பெயர்ந்து வேறு இடங்களில இயங்கிவந்த தென்மராட்சிப் பிரதேச அலுவலகங்களும், பாடசாலைகளும் மீண்டும் சொந்த இடங்களில் இயங்கத் தொடங்கிவிட்ட நிலையில், தென்மராட்சிக்கான பஸ் சேவைகள் சீரில்லாததால் பிற இடங்களில் இருந்து அங்கு செல்வதற்கு மாணவர்களும, அலுவலர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிககப்பட்டது. குறிப்பாக பாடசாலை பஸ சேவைகள் ஆரம்பிக்கப்படாததால் வலிகாமத்தில் தங்கியுள்ள தென்மராட்சி மாணவர்கள் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

யாழ்.பஸ் நிலையம் உட்பட பிரதான இடங்களில் இருந்து தென்மராட்சிக்கு சேவையிலீடுபடுத்தப்படும் பஸ்களில் பெரும்பாலானவை முகமாலை வரை சென்றுவருவதாகவும்-

ஏ-9 பாதையூடாக சென்று வருபவர்களால் அந்த பஸ்கள் நிரம்பி வழிவதால் கைதடி, நுணாவில், சாவகச்சேரி, மீசாலை போன்ற இடங்களுக்கு செல்ல வேண்டிய மாணவர்களும், அலுவலர்களும் பஸ்களுக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் -

அவ்வாறு காத்திருந்தாலும் முகமாலையிலிருந்து அதிக பயணிகளை ஏற்றி வரும் பெரும்பாலான பஸ்கள் அவர்களை ஏற்றாமலேயே சென்றுவிடுவதாகவும் - கூறப்படுகிறது.

இது தொடர்பாக யாழ்.பஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கேட்போது, முகமாலைக்கென அனுமதிக்கப்பட்ட ஐந்து பஸ்களுடன், மேலதிகமாக 15 இற்கும் மேற்பட்ட பஸ்கள் தினமும் முகமாலை வரை சேவையில் ஈடுபடுததப்படுவதாகவும் -

போதிய பஸ்கள் வந்து சேர்ந்ததும் தென்மராட்சிக்கான பாடசாலை சேவைகள் மீள ஆரம்பிக்கப்படுமெனவும் - தெரிவித்தார்.

இதேவேளை-

தென்மராட்சிப் பிரதேச அலுவலர்களினதும், மாணவர்களதும் நலன் கருதி தினமும் காலையும் மாலையும் யாழ்.நகரிலிருந்து மிருசுவில் வரையிலாவது பஸ் சேவைகளை நடத்துமாறு தென்மராட் சிப பிரதேச செயலகம், கல்வி வலய அலுவலகம், சாவகச்சேரி நகரசபை ஆகியவை வ.பி.போ.சபையிடம் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகின்றன.

இதற்கிடையில் தென்மராட்சி பாடசாலைகள் மற்றும் அலுவலகங்களை மீள இயக்குவதில் முன்நின்றவர்கள் தற்போதைய பஸ்சேவை விவகாரத்தில் அக்கறை செலுத்தாமல் இருப்பது வருத்தமளிப்பதாக தென்மராட்சி மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-9-12-117)



சு.மகேந்திரன் மொழிபெயர்த்த உலக விடுதலைப் போராட்டங்கள பற்றிய சிறுகதைகளின் தொகுப்பான 'தீ நிழல்கள்' என்ற நூலின் வெளியீட்டு விழா அண்மையில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் நூலாசிரியர் பதிலுரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். அருகில் மதிப்பீட்டுரை வழங்கிய அன்ரன் அன்பழகன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த கே.பி.றெஜி ஆகியோர் காணப்படுகின்றனர். *(படம்: நெடுங்கேணியூரான்)*

# சொந்த இடத்தில் பிரதேச செயலகம் இயங்குகிறது; அங்கு செல்ல போக்குவரத்து வசதி இல்லையே

## மருதங்கேணி மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஜூன்4

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் மீண்டும் சொந்த இடத்தில் செயற்பட ஆரம்பித்துள்ள போதிலும், அங்கு சென்று தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில காலங்களாகத் தும்பளைப் பகுதியில் தற்காலிகமாக இயங்கிவந்த இந்த அலுவலகம் அண்மையில் உரிய இடத்தில் செயற்பட ஆரம்பித்துள்ளமை தெரிந்ததே.

அலுவலகம் அமைந்துள்ள பருத்தித்துறை - மருதங்கேணி வீதி பொது மக்களின் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் சுமார் 45 மைல் தூரம் பயணம் செய்துதான் மக்கள் அலுவலகத்தைச் சென்றடைய வேண்டியுள்ளது.

அத்துடன், அலுவலகத்தில் பணியாற்றும் அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட வாகனங்களில் தமது கடமைக்குச் சென்று வருகின்றனர். ஆகவே, பருத்தித்துறை - மருதங்கேணி வீதி திறக்கப்படும் பட்சத்தில், 10 மைல் பிரயாணத்தை மேற்கொண்டு மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றக் கூடியதாக இருக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

கடந்த 95 ஆம் ஆண்டுக்கு முன்பு மேற்படி பாதையூடாகவே மக்கள் தமது பிரயாணத்தை இலகுவாக மேற கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அலுவலகத்திற்குச் செல்லும் வீதிப பகுதியில் படையினரின் பாரிய முகாம் ஒன்று இருப்பதே பாதை தடைப்பட்டிருப்பதற்குக் காரணம் என்றும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

(எ-10)




உ

யாழ். கந்தர்மடம், அரசடி வீதி

**அருள்மிகு செல்வநாகபூஷணி அம்பாள் திருக்கோயில்**

பஞ்சகுண்டபக்ஷ புனராவர்த்தன பிரதிஷ்டா

**மஹா கும்பாபிஷேக விழா**

*அம்பிகை அடியார்களே!*

நிகழும் சித்ரபானு வருஷம் வைகாசித்திங்கள் 22 ஆம் நாள் நாளை (05.06.2002) புதன்கிழமை காலை 10.57 மணிமுதல் 11.48 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நிகழ அம்பிகை திருவருள் பாலித்துள்ளார்.

நிகழ்ச்சி விவரம்

01.06.2002 சனிக்கிழமை கிரியைகள் ஆரம்பமாகிவிட்டன. இன்று (04.06.2002) செவ்வாய்க்கிழமை அடியார்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் வைபவம் காலை 8.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை இடம்பெறும்.

நாளை (05.06.2002) புதன்கிழமை காலை 10.57 மணிமுதல் 11.48 மணிக்குள் வரும் சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

*கும்பாபிஷேக பிரதமகுரு: சிவாகம கிரியா ஞானபூபதி*
*பிரம்மஸ்ரீ செ.பரமானந்தக்குருக்கள் (கல்வயல்)*

அடியார்கள் வருக! அருள் பெறுக!!

- அம்பிகை அடியார்கள்,
திருப்பணிச்சபையினர், ஆலய தர்மகர்த்தா.

(4463)


# மக்களின் ஒத்துழைப்பினாலேயே புலிகள் வெற்றிகளை அடைந்தனர்

## அச்சுவேலியில் பாப்பா உரை

அச்சுவேலி,ஜூன்4

தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்திய யுத்தவெறியர்கள் அல்ல, சமாதானப் பிரியர்கள் என்பதை சர்வதேச உலகிற்குக் காட்டுவதற்காகவே நாம் யாழ்ப்பாணம் வரவேண்டிய நிலையில் வராமல், இந்த நிலையில் வந்து நிற்கின்றோம்.

எமது வெற்றிகள் தமிழ்மக்களின ஒத்துழைப்பினால் பெறப்பட்ட தன்மான வெற்றிகள். தமிழ்மக்களின் நல்வாழ்வுக்காக - தமிழ் மண்ணின் விடுதலைக்காக - 16 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்கள் மாவீரர்களாகவும், ஆயிரக்கணக்கானோர் உடல் உறுபபுக்களை இழந்த நிலையிலும், வாழ்ந்துகொண்டு இருக்கின்றனர்.

- இவ்வாறு கூறினார் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர் பாப்பா.

அச்சுவேலி தெற்கு, உலவிக்குளம சித்திவிநாயகர் ஆலய வீதியில் அண்மையில் நடைபெற்ற கொள்கை விளக்கக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத தலைவர் க.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் புலிகளின் பிரமுகர் பாப்பா மேலும் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் வருகையால் ஏமாற்றம் அடைந்த சக்திகள் பலவதந்திகளைப் பரப்பி வருகின்றன. இந்த வதந்திகளால் தமிழ்மக்கள் ஏமாற மாட்டார்கள். தமிழ்மக்களின் ஒத்துழைப்பினால் தான் விடுதலைப் புலிகள் வெற்றி பெற்றார்கள். விடுதலைப் புலிகளும், தமிழ்மக்களும் பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் தமிழ்மக்களுக்கு நிறைவேற்ற முடியாத திட்டங்களைத் தருகின்ற அரசியல் வாதிகள் அல்ல. நாம் தமிழ்மக்களின் விடுலைக்காக - தமிழ் மண்ணின் மீட்புக்காக - உயிரையே அர்ப்பணிககக் காத்திருக்கின்றோம்.

தமிழினம் பல தடவைகள் ஏமாறறப்பட்டுள்ளது. ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் ஏமாற மாட்டார்கள். நாம் எமது கோரிக்கையில் உறுதியாக நிற்கின்றோம். எமக்குத் துணையாக தமிழ்மக்களாகிய நீங்கள் இருககின்றீர்கள் - என்று தெரிவித்தார்.

அச்சுவேலி தென்னிந்திய திருச்சபைப் போதகர் அருட்திரு. தேவராசா, உலவிக்குளம் சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ச. விருத்தகிரீசக் குருக்கள், அச்சுவேலி மத்திய கல்லூரி அதிபர் திருமதி ச.கனகராசா ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் உரையாற்றினர். (எ-11)

### கிட்டுப் பூங்காவை பார்வையிடும் தென்பகுதி மக்கள்

தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா மேற்கொண்டு வரும் சிங்கள மக்கள் முத்திரைச் சந்தியில் சேதமடைந்த நிலையில் உள்ள கிட்டுப் பூங்காவையும் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

கடந்த சில நாள்களாக மேற்படி பூங்காவைப் பார்வையிடும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

(எ-17)

### திருத்தப்படாத வீதி

தாவடி தமிழ்கலவன் பாடசாலை வீதி திருத்தப்படாத நிலையில் மிக மோசமாகக் காணப்படுகின்றது.

இவ்வீதியால் பயணிக்கும் மாணவர்கள், மக்கள் பல அசெளகரியங்களை எதிர்நோக்குவதுடன் விபத்துக்களுக்கும் உள்ளாகின்றார்கள்.

(ஒ-13-ரி)


**தேவை**

**இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்.**

சுற்றுலா விடுதிக்கான வீடும். அலுவலகப் பாவனைக்கான கட்டடமும் வாடகைக்குத் தேவை.

மேற்படி தேவைக்காக யாழ். நகரப் பகுதிக்குள்ளோ அல்லது அதனை அண்டிய பகுதிக்குள்ளோ இருவெவ்வேறு கட்டடங்கள் எம்மால் வாடகைக்குப் பெறப்படவுள்ளன.

1. சுற்றுலா விடுதிக்கான (Circuit Bangalow) வீடு
   சுற்றுலா விடுதிக்கான வீடு குளியல் அறைகளுடன்கூடிய படுக்கை அறைகள் குறைந்தது நான்கினைக் கொண்டதாகவும், வாகனங்கள் நிறுத்தக்கூடிய இடவசதியினைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். வீட்டின் முன்புறத்தில் பூந்தோட்டம் இருப்பது விரும்பத்தக்கது.
2. காரியாலயக் கட்டடம்
   காரியாலயப் பாவனைக்கான கட்டடம் குறைந்தது ஐந்து அறைகள் கொண்டதாகவும் 1500 சதுர அடி விஸ்தீரணத்திற்குக் குறையாததாகவும் இருத்தல் வேண்டும்.

மேற்படி கட்டடங்களை வாடகைக்கு வழங்கக் கூடியவர்கள் 12.06.2002ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபன யாழ். காரியாலயப் பொறுப்பதிகாரியுடன் நேரிலோ அல்லது கடிதமூலமாகவோ தொடர்புகொள்ளவும்.

*65, கன்னாதிட்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பொறுப்பதிகாரி,
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்,
யாழ்.காரியாலயம்.

(C/22384)


**ஈரவிழிகளுடன் ஈராண்டு**

அன்னை மடியில் 28 - 06 - 1977



அரக்கர் அழிப்பில் 27 - 05 - 2000



அன்னை மடியில் 20 - 03 - 1973

**செல்வன் கணேசலிங்கம் நிரஞ்சன்** (சிறி)
(செயலாளர், கமநல சேவைகள் நிலையம் A.P.C.)

**செல்வி கணேசலிங்கம் துஷ்யந்தினி** (துஷி)
(பேராதனை பல்கலைக்கழக B.A. மாணவி)

திதி: 04.06.2002

**காலனோ கொடிய னம்மா**
**கருணையோ சிறிது மில்லான்**
**ஞாலமே அதிலே இங்கு**
**நாமுமே நலிந்து வாடி**
**காலமோ ஈராண் டாகிக்**
**கடந்ததுடன் கழிந்த போதும்**
**கோலமே சோக மாகிக்**
**கூவியே கதறல் பாரீர்!**

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

- குடும்பத்தினர்.

(4458)



மகரகமவில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைமைக் காரியாலயத்தில் தேசிய இளைஞர் மாநாடு அண்மையில் நடைபெற்றது. வடக்கு - கிழக்கு உட்பட இலங்கையின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த இளைஞர், யுவதிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டில் யாழ்.தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தைச் சேர்ந்த கி.ஐங்கரன் (யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடம்) உரையாற்றியபோது எடுக்கப்பட்ட படம். (க-4)

# வட்டுக்கோட்டையில் சத்துணவுத்திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன்4

வட்டக்கோட்டை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட செம்பாண்டான் தோட்டம் கிராமத்திலுள்ள போசாக்கு குறைவான ஒருவயது தொடக்கம் 5வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பிரிவைச்சேர்ந்த சுமார்40 சிறுவர்கள் தெரிவுசெய்யப்பட்டு, கடந்த மார்ச் மாதம் முதல் இவ்வுணவு வழங்கப்பட்டுவருகிறது.

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ்பாணக் கிளையின் அனுசரணையுடன், நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டம் சுமார் 6 மாதங்களுக்கு செயற்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-15)

# அழைப்புக் கட்டளை

[இல.16 பிரிவு 55 (1)]

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட/நீதிமன்றத்தில்

தனபாலசிங்கம் தருமராசா
95/1, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

வழக்கு இல. மணநீக்கம்/302 — *வழக்காளி/கள்*

எதிர்

தருமராசா பெண் விஜயகுமாரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
*எதிராளி/கள்*

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளி/க்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி பிராதில் வேண்டிநிற்கும் நிவாரணங்களைப் பெற

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடுத்துள்ளராதலினால், உமது மறுமொழி, ஏதேனும் இருப்பின், 2002ஆம் ஆண்டு ஆனி மாதம் 11ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில், வழக்கானது மறு கட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணிமூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப் படுகின்றீர்.

வரைந்தது
**லிங்கா துரைராஜா**
வழக்காளியின் சட்டத்தரணி.

நீதிமன்றக் கட்டளைப்படி
**து.சிறீமோகன்**
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

*குறிப்பு:* விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால், பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும், பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்காகும் செலவை மேவுவதறகுத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80ஆம் பிரிவின்மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

**து.சிறீமோகன்**
கையொப்பம் பதிவாளர்.

2002ஆம் ஆண்டு ஆனி மாதம் 3ஆம் நாளாகிய இன்று.. (4475)

# ஆங்கில தினவிழா

யாழ்ப்பாணம்,ஜூன்4

வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் ஆங்கில தின விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் மு.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ்.கல்வி வலய ஆங்கில பாட உதவிக்கல்விப் பணிபபாளர் செ.தியாகராஜா பிரதம விருந்தினராகவும், நல்லூர் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (எ-ரி)

# சமூக பாதுகாப்புச்சபையின் அலுவலகம் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்4

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் யாழ்மாவட்ட அலுவலகம் நேற்று முன்தினம் யாழ்.செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

சமூக நலன்புரி அமைச்சர் ரவி சமரவீர இந்த அலுவலகத்தை வைபவ ரீதியாகத் திறந்துவைத்தார்.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த திறப்பு விழாவில் சமூக பாதுகாப்பு சபைத்தலைவர் கே. போகம்பர, வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பதிகாரி எஸ்.அரவிந்தன் ஆகியோர கலந்துகொண்டனர். (எ-13)

# விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஜூன்4

மானிப்பாயில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற கார்,சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்; சைக்கிள் பலத்த சேதமடைந்தது.

சைக்கிளில் சென்றவர்களான ஆவரங்காலைச்சேர்ந்த ரவீந்திரன் தலீபன (வயது21), சிவஞானம் ஜெயானந்தன் (வயது20) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தால் நடத்தப்படும் பொன்விழா நிகழ்விற்கான கரபந்தாட்டப் போட்டியில் பங்குபற்றிவிட்டுச் சென்ற வேளையே விபத்து நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-15)


**கிறிஸ்ரல் சென்ரர்**
நெல்லியடி
**ENGLISH CLASS**
பிரிவு – II (27)
ஆரம்பம்: 05.06.2002 3.00 p.m.
By: S.சடகோபன்
எழுதுவினைஞர் வகுப்பு
வெள்ளி காலை 8.30
(நேரமாற்றம்) (4469)


## தவறிவிட்டது

*கரவெட்டி மத்தி, கரவெட்டியைச் சேர்ந்த சண்முகரத்தினம் நிரஞ்ஜனா என்பவரின் தேசிய அ. அ. (இல. 796642645V).விசேட அ. அ. (இல. 0909013149). பல்கலைக்கழக அ. அ. (98/DG/B/35), பாஸ், சிறுபயறி, சிறு தொகைப் பணம், பல்கலைக்கழக நூலக அனுமதி அட்டை என்பன அடங்கிய பிறவுண் நிற மணிப்பேர்ஸ் 30. 05. 2002 வியாழக்கிழமை பல்கலைக்கழகத்துக்கும் மனல்தறை வீதிக்குமிடையே தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பல்கலைக்கழகத்தில் ஒப்படைத்துதவவும்.* (4465)

# இந்திய கடற்படையிடம் சிக்கிய படகுகள் மீட்கப்படும்

## சமாசம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்4

இந்தியக் கடற்படையினரால் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைப்பற்றப்பட்டு இந்தியக் கரைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைப் படகுகளை தற்போதைய சமாதானச் சூழ்நிலையைப் பயன்படுத்தி மீட்டுவர வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஒரு தசாப்த காலமாக இலங்கையிலிருந்து அகதிகளை ஏற்றியும், எல்லை தாண்டியும் சென்ற படகுகள் இந்தியக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் படகுகளை கடற்றொழில், அகதிகள் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அமைச்சின் உதவியுடன் மீட்டு வருவதற்கான நடவடிக்கைகளில் சமாசம் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் படகுகளை மீட்கும் நடவடிக்கையில் முதற்கட்டமாக இவ்வாறு கைவிடப்பட்டிருக்கும் படகுகளின் உரிமையாளர்கள் தம்மை அத்தாட்சிப் படுத்துவதற்குரிய ஆதாரங்களை சமாசத்திடம் சமர்ப்பிக்கும் வண்ணம் சமாசத தலைவர் தவநாதன் கேட்டுள்ளார்.

இலங்கையிலிருந்து இந்தியாவிறகுச் சென்ற 440இற்கு மேற்பட்ட படகுகள் இந்தியக் கரையில் தடுத்து வைக்க்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (ஒ-ரி)

# வன்னியில் மருத்துவ முகாம்கள்; யாழ். வைத்தியர்கள் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்4

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் நலன் கருதி அங்கு மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை முகாம்களை நடத்த யாழ்.போதனாவைத்தியசாலை மருத்துவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்த முகாம்களை நடத்துவதற்கான ஆயத்தங்களைத் திட்டமிடுவதற்காக சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் அதயாளன் தலைமையிலான குழுவினர் நேற்று வன்னிப்பகுதிக்கு சென்றனர்.

வன்னிப்பகுதியில் தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் பல்வேறு இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப் படும் என்றும் -

சகல வித நோய்களுக்கும் உரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் -

யாழ். மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-15-139)

# 'சதாவதானி' நினைவுதின கட்டுரைப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம்,ஜூன்4

பருத்தித்துறை சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் 'உதயன்' பத்திரிகை நிறுவன அனுசரணையுடன் நடத்திய 'சதாவதானி' நினைவுக் கட்டுரைப் போட்டியில் முதல் பரிசான ஆயிரம் ரூபாவை யாழ்.கந்தர் மடத்தைச் சேர்ந்த செல்வி சிவகௌரி சிவகுருநாதன் பெறுகிறார்.

இரண்டாம் பரிசான 750ரூபாவை புத்தூர் வாதரவத்தையைச் சேர்ந்த செல்வி விஜிதா இரவீந்திரநாதனும், மூன்றாம் பரிசான 500 ரூபாவை சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த நாகேஸ்வரசர்மா சிவமனோகரசர்மாவும் வென்றுள்ளனர்.

வருடந்தோறும் சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் நினைவாக இக் கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ)


**உடன் தேவை**

யானை மார்க் குளிர்பான ஸ்தாபனத்துக்கு
கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

1. முகாமையாளர் Manager
2. கணக்காளர் Accountant (Commerce A/L)
3. விற்பனைப் பிரதிநிதி Van Salesman

(வயது 25 - 45)

உடன் தொடர்புகொள்ளவும்
*பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,*
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (4467)


## அபிவிருத்திப் பொருளியல் இதழ் - 03இற்கான அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

| | |
|---|---|
| முதலாம் பரிசுக்கான இலக்கம் | 6379 |
| இரண்டாம் பரிசுக்கான இலக்கம் | 5022 |
| மூன்றாம் பரிசுக்கான இலக்கம் | 2352 |

*ஆறுதல் பரிசுகளுக்கான இலக்கங்கள்:* 4250, 9602, 5767, 0371, 5455

மேற்படி இலக்கங்களுக்குரியவர்கள் தமக்குரிய பரிசில்களை மன்றத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும். மேற்படி நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இளம் பொருளியலாளர் மன்றம்
பொருளியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
(4470)

# பிரம்மோபதேச உபநயன அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான சித்ரபானு வருடம் வைகாசித் திங்கள் 22ஆம் நாள் நாளை (05.06.2002) புதன்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்தயோகமும் தசமித் திதியும் குரு ஓரையும் கூடிய காலை 9 மணிமுதல் 10மணி 15 நிமிடம் வரையுள்ள கடக லக்கின சுபமுகூர்த்தவேளையில்,

கைதடி கயிற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தான பிரதம குருவாகிய காலஞ்சென்றவர்களான **பிரம்மஸ்ரீ க.முத்துக்குமாரசுவாமி குருக்கள் – வள்ளியம்மா** தம்பதியினரின் பௌத்திரனும்

இருபாலை வீரகத்திப் பிள்ளையார் முன்னாள் அர்ச்சகராகிய **ச.சிவசாமி ஐயர் காலஞ்சென்ற சரஸ்வதி அம்மா** தம்பதியினரின் தௌஹித்திரனும்

எமது ஏக புத்திரனுமாகிய

**யாதவ சர்மா** அவர்களுக்கு

எல்லாம்வல்ல கயிற்றசிட்டி கந்தன் துணையுடனும் ஸ்ரீபர்வதவர்த்தனி அம்பிகையின் திருவருளும் வைதீகசாகரம் கதிர்.செல்லப்பா குருக்களினதும் 'வேதசிவாகம ஞானபாஸ்கரன்' தாணு. மகாதேவக் குருக்களினதும் குருவருளும் சேர்ந்து நிற்க யக்ஞோபவீததாரணம், பிரம்ம உபதேசம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து குமாரனை ஆசீர்வதித்து நிகழ்வைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*தீட்சா குரு:* **கிரியா கலாபமணி ச.வரதராஜேஸ்வரக் குருக்கள்** (மயிலணி முருகன் கோயில் பிரதம குரு)

*உபநயனம் நிகழும் இடம்:* **உரும்பிராய் ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்மன் தேவஸ்தான மண்டபம்.**

*ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்மன் கோயில்.*
*உரும்பிராய்.*

பிரம்மஸ்ரீ க.மு.சோமசுந்தரக் குருக்கள் - பவானி அம்மா தம்பதியினர். (4468)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

07-05-2002 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## செல்லப்பா வினாயகமூர்த்தி

அவர்களது வீட்டுக்கிருத்தியம் 06-06-2002 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. 'ஆகவே உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*விடத்தற்பளை,*
*மிருசுவில்.*

- குடும்பத்தினர்.

(C/22388)

## மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம்
பெறுவதற்கான
## வைத்தியச் சான்றிதழ் வழங்கல்

மோட்டார் போக்குவரத்துப் பகுதியினரின் விதிகளுக்கமைவாக பதிவு செய்யப்பெற்ற வைத்தியர்களின்மூலம் வைத்தியச் சான்றிதழ் உடனுக்குடன் வழங்கப்படும்.

**ENT மெடிக்கல் கிளினிக்**
22, 24, முனீஸ்வரன் வீதி [யாழ். பஸ் நிலைய முன் ஒழுங்கை],
(4485) யாழ்ப்பாணம்.

## சாவகச்சேரி நகரசபை
## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 20.06.2002 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அதேதினம் 11.00 மணிக்குக் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தின் (இக்ராட்) தரம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் மாத்திரமே கேள்விப் பத்திரத்தைக் கோருவதற்குத் தகுதியுடையவராவார்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப்புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| வேலை விவரம் | | மீளளிக்கப்படும் கேள்விக் கட்டணம் | கேள்விப் பத்திரக்கட்டணம் | |
|---|---|---|---|---|
| | | | படிவக் கட்டணம் | பொருள்சேவைக் கட்டணம் |
| 01. | சாவகச்சேரி பஸ் நிலையக் கொட்டகை திருத்தம் | ரூ. 3,000/- | 500/- | 62.50 |
| 02. | நுணாவில் கிளை நூலகக் கட்டடத் திருத்தம் | ரூ. 2,500/- | 500/- | 62.50 |

கேள்விப்பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 17.06.2002 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரையும் கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக்கட்டணத்தையும் செலுத்துவதன்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் இந்த அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

*நகரசபை அலுவலகம்,*
*சாவகச்சேரி.*
*03.06.2002* (C/22390)

**வெனடிற்க் தனபாலசிங்கம்** (J.P.U.M.)
தலைவர்,
நகரசபை, சாவகச்சேரி.

### உடற்பயிற்சி டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பம்

யாழ்பல்கலைக்கழக உடற்பயிற்சி டிப்ளோமாக் கற்கைநெறிக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தியடைந்திருப்பதுடன், மாவட்ட மட்டத்தில் அல்லது தேசிய மட்டத்தில் ஏதேனும் விளையாட்டில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்படி நியமனத்துக்கான விண்ணப்ப முடிவுதிகதி எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதியாகும்.(எ-12)

**ராஜா** யாழ்ப்பாணம்
ரஜனி, மீனா,
கவுண்டமணி, மனோரமா
நடித்த
**எஜமான்**
காட்சிகள்: 10.30, 2.30, 5.30 (C/22356)

தமிழன் திரைப்படப்
பரிசு பெற்ற மூன்று
அதிர்ஷ்டசாலிகள்
முதலாம் பரிசு : இல. 12090
2ஆம் பரிசு : இல. 21472
3ஆம் பரிசு : இல. 13217

**நாகம்ஸ்** சுன்னாகம்
இன்று முதல்
இளைய தளபதி விஜய், உலக அழகி
பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
**தமிழன்**
(ரீகல்) (4472)
காட்சிகள்: 11.00,3.00 (புதிய நேரம்)

**நிறைஞ்சனாஸ்**
சங்கானை
சுப்பர்ஸ்ரார் ரஜனி, நக்மா,
ரகுவரன் மற்றும் பலர் நடித்த
**பாட்ஷா**
காட்சிகள்: 10.30, 2.30, 5.30 (C-22357)

கற்ராக் மூலம் கண் பார்வை குறைந்தவர்களே!
கவலையை விடுங்கள்!!
சர்வதேச அங்கீகாரம் பெற்ற (I.S.O.) அப்பாசாமியின்
தயாரிப்பான கற்ராக் ஒப்பறேசன் லென்ஸ்கள்
மிகமிகக் குறைந்த விலையில் யாழ்ப்பாணத்திலேயே
உங்களுக்கு வழங்குகின்றார்கள்
## ENT மெடிக்கல் கிளினிக் ஸ்தாபனத்தினர்
அத்துடன் எங்களிடம்
- அப்பா லென்ஸ் (சகல பவர்களிலும்) ரூ. 650/- மட்டுமே
- அப்பா வீஸ்
- அப்பா கலர்

கண் சத்திரசிகிச்சைக்குத் தேவையான
எல்லாப்பொருள்களும் பெற்றுக்கொள்ளலாம்.
*உடனே விஜயம் செய்யுங்கள்.* (4483)

## ENT மெடிக்கல் கிளினிக்
22, 24, முனீஸ்வரன் வீதி,
(ஹற்றன் நஷனல் வங்கி அருகில்)
யாழ். பஸ் நிலைய முன் ஒழுங்கை.

## விவசாயபீட மாணவர் ஒன்றியம்
நடத்தும்
G.கிருபாகர், T.ஜெயக்குமார் ஞாபகார்த்த
## விஞ்ஞான வினா-விடைப்போட்டி - 2002

காலம் : இன்று (04.06.2002) செவ்வாய்க்கிழமை காலை 10 மணி (மு.நே.)
இடம் : *வடமராட்சிப் பகுதி பாடசாலைகள் -*
யா/கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி
*ஏனைய பாடசாலைகள் -*
விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்

*யாழ்.பல்கலைக்கழகம்.* (4482) விவசாய பீட மாணவர் ஒன்றியம்.

## தவறிவிட்டது

பருத்தித்துறை வீதி, நல்லூரிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது இல. 670712265V அடையாள அட்டை, போன்ற முக்கிய ஆவணங்களுடைய ஒரு கைப்பை வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

**செ.ஜெயராசா**
(4481) நீர்வேலி சந்தி, நீர்வேலி.



சுன்னாகம்
## புனித அந்தோனியார் ஆலய பெருவிழா உற்சவம்

04.06.2002 : இன்று மாலை 5.00 மணிக்குக் கொடியேற்றம்
12.06.2002 : மாலை 5.00 மணிக்கு நற்கருணை விழாவும் நற்கருணைப் பவனியும்
13.06.2002 : காலை 7.30 மணிக்குத் திருப்பலியும், அந்தோனியார் திருச்சொருபப் பவனியும், தொடர்ந்து நண்பகல் அன்னதானமும்.

உற்சவப் பெருவிழா சுன்னாகம் பங்குத்தந்தை
அருட்திரு. இராசசிங்கம் அடிகளார்
தலைமையில் நடைபெறும்.

*சுன்னாகம்.* (4478) - **புனிதரின் பக்தன்.**

## சாயிராம் மருந்தகம்
## இடம்மாற்ற அறிவித்தல்

கொடிகாமம் வீதி, நெல்லியடி, கரவெட்டியில் இதுவரை சேவையாற்றிவந்த **"சாயிராம் மருந்தகம்"** தற்பொழுது, *கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியில்* தனது பணியை வழங்கிவருகிறது என்பதனை அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அன்புள்ள சேவையாளன்
தியாகராசா வேலாயுதபிள்ளை
(C/22389) (அம்பிகா)

## யாழ்.
## ஹற்றன் நஷனல் வங்கியின்
ஆதரவுடன்
## யாழ். இந்துக் கல்லூரி
## சதுரங்கக் கழகம்
நடத்தும்
## பாடசாலை தனிநபர், அணிகளுக்கிடையிலான
## வருடாந்த (9ஆவது)
## சதுரங்கச் (CHESS) சுற்றுப்போட்டி - 2002

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் 16 வயதுக்கு மேற்பட்ட, 16 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் அணி, பெண்கள் அணி என்பனவற்றிற்கு 6 வீரர்களையும் 1 பதில் வீரரையும் கொண்ட விண்ணப்பத்தினையும் 14 வயதுக்குட்பட்ட, 12 வயதுக்குட்பட்ட ஆண்கள், பெண்கள் தனிநபர் போட்டிக்கு ஒரு பாடசாலையிலிருந்து ஒவ்வொரு பிரிவிற்கும் ஐந்து வீரர்களுக்கு மேற்படாத விண்ணப்பத்தினையும் தங்கள் பாடசாலை அதிபர் ஊடாக,

அதிபர்,
யாழ்.இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

எனும் விலாசத்திற்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ 2002-06-19 புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*குறிப்பு:-*
1. முதலாம் சுற்று அணித்தெரிவும் போட்டி ஒழுங்குகளும் 2002-06-19 புதன் பி.ப. 3.00 மணிக்கு யாழ். இந்து குமாரசுவாமி மண்டபத்தில் ஆரம்பமாகும். சகல ஆவணங்களுடனும் பொறுப்பாசிரியர், அணித்தலைவர் ஆகிய இருவர் மட்டும் பங்குபற்றினால் போதுமானது.
2. 2002.06.22 சனி, 2002.06.23 ஞாயிறு மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 5.00 மணிவரை யாழ். இந்து குமாரசுவாமி மண்டபத்தில் போட்டிகள் நடைபெறும்.
3. சதுரங்கப் பலகைகளையும் மதிய உணவுப் பார்சல்களையும் கொண்டுவரவும்.
4. 2002.07.13 சனி மு.ப. 9.00 மணிக்கு யாழ். இந்து குமாரசுவாமி மண்டபத்தில் பரிசளிப்பு விழா கலைநிகழ்ச்சிகளுடன் நடைபெறும்.
5. 2002.12.31இல் வயது எல்லைகள் கணிக்கப்படும்.
6. எல்லாப் போட்டிகளும் ஒரே நேரத்தில் நடைபெறுவதால் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் பங்குபற்றமுடியாது.
7. முடிவு திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
8. ஒரு பாடசாலையிலிருந்து ஒரு பிரிவுக்கு ஓர் அணி மட்டும் பங்குபற்றலாம்.
9. மேலதிக விவரங்களுக்கு யாழ். இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகத்துடன் அல்லது யாழ். ஹற்றன் நஷனல் வங்கியுடன் தொடர்புகொள்ளவும்.

**யாழ். ஹற்றன் நஷனல் வங்கி,**
**யாழ்ப்பாணம்.**
*2002-06-03* (C/22391)

**அதிபர்,**
**யாழ். இந்துக் கல்லூரி.**

## அறிவித்தல்
### கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

மேற்படி ஆலயம் தொடர்பான வழக்கு இல. ரீ.ஆர். 02 யாழ். மாவட்ட நீதிமன்றில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இவ்வழக்கு தொடர்பாகச் சில விடயங்களைத் தெளிவுபடுத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறு மன்று எனக்குக் கட்டளையிட்டுள்ளது.

அதன் பிரகாரம், மேற்படி ஆலயத்தின் மஹோற்சவ உபயகாரர்கள் உட்பட அனைத்து உபயகாரர்களும் 06.06.2002 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணிக்குத் தவறாது மேற்படி ஆலய மண்டபத்தில் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

வே.நடராசா,
03-06-2002. (4477) பெறுநர்.

# தென்மராட்சிப் பிரதேசத்தில் இதுவரை 10,000 குடும்பங்கள் மீளக்குடியமர்வு

தென்மராட்சி,ஜூன்4

தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் கடந்த மே மாதம் வரை 10 ஆயிரத்து 829 குடும்பங்களைச் சேர்ந்த 39ஆயிரத்து 792பேர் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக் குடியமர்ந்துள்ளதாகப் பிரதேச செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

பத்துக்கு மேற்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் இன்னும் மக்கள் மீளக குடியமர அனுமதிக்கப்படாததாலும், சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீடுகள் சேதமடைந்துள்ளதால் இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மீளக் குடியமர முடியாத நிலையிலும் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ம-117)

## பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள்

# பாடசாலையில் இருந்து படையினர் வெளியேறினர்

வடமராட்சி,ஜூன்4

கடந்த 7 வருடங்களாக பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் முகாமிட்டிருந்த படையினர் அங்கிருந்து முற்றாக வெளியேறியுள்ளனர்.

1996ஆம் ஆண்டு வடமராட்சிப் பிரதேசத்தை இராணுவம் கைப்பற்றிய சமயம், அங்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, ஹாட்லிக் கல்லூரி என்பன உட்பட பல அரச திணைக்களக் கட்டடங்களை உள்ளடக்கிப் படையினர் முகாமிட்டிருந்தனர்.

இங்கிருந்து படையினரை வெளியேறக்கோரி கடந்த 23ஆம் திகதி வடமராட்சிப் பகுதிப் பாடசாலை மாணவர்கள் பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றைப் பெருமெடுப்பில் நடத்தியிருந்தனர்.

இதனையடுத்து இந்த முகாமின் ஒரு பகுதியான மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இருந்து படையினர் முற்றாக வெளியேறியுள்ளனர்.

(ம-117)

# சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பம் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூன்4

யாழ். செயலகத்தில் உள்ள ... போக்குவரத்துத் திணைக ... அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவ விநியோகம் நேற்று ஆரம்பமாகியது.

நீண்டகால இடைவெளிக்குப் பின்பு இந்த விநியோகம் ஆரம்பமானதை அடுத்து, சுமார் 150 பேருக்கு நேற்று விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டன என போக்குவரத்துத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுமுறை தினங்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் தினமும் விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்படும் எனவும் -

லொறி மற்றும் பஸ் தவிர்ந்த ஏனைய வாகனங்களுக்கே விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும்-அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் எதிர்வரும் 10ஆம் திகதி தொடக்கம் ஏற்றுக்கொள்ளப்படும் என்வும் தெரிவிக்கப்பட்டது.

(எ-10)

### ஊனமுற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன் அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் தங்கன் மற்றும் தொல்காப்பியன், ஜோர்ச் ஆகியோரர் கலந்துகொண்டனர்.

"சிங்கள மக்களுக்கும் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வை வளர்க்க இத்தகைய சந்திப்புக்கள் உதவும். எமது நிலைப்பாட்டை சிங்கள மக்கள் அறிய இத்தகைய நல்லெண்ணக் குழுக்கள் தொடர்ந்து இங்கு வரவேண்டும்" என்றார் தமிழ்ச்செல்வன்.

புலிகளுடனான சந்திப்பு எமக்கு உற்சாகத்தையும் உத்வேகத்தையும் தருவதாக அமைந்திருந்தது என்று ஊனமடைந்த முன்னாள் படையினரின் சங்கச் செயலாளர் தெரிவித்தார். (ம-3-4-12)

### தனிமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்வையிட்டார்.

பிரேத பரிசோதனைக்காக சடலத்தை யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படி அவர் உத்தரவிட்டுள்ளார்.

வயோதிபரின் வீட்டில் இருந்த பொருள்கள் வீடெங்கும் இறைக்கப்பட்டுக் கிடந்தன என்றும் -

வீட்டிலிருந்த நெல், சைக்கிள் ஆகியன களவாடப்பட்டுள்ளன என்றும் -

தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3-ரி)

### மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களில் அனைத்துப் பாடசாலைகளிலும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வுகளில் ஈகச்சுடரேற்றல், அகவணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து, மாணவ தலைவர், அதிபர், ஆசிரியர் உரைகள், எழுச்சி நாள் பிரகடனம் வாசித்தல், விருந்தினர் உரை ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறவிருக்கின்றன. (ம-3)

### செயலகம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று முடிவு செய்துள்ளோம். யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகம் முன்பும் அதனை விஸ்தரிப்பது குறித்தும் ஆராய்ந்து வருகின் றோம் என்று அவர் மேலும் கூறினார்.

மீனவர்களைத் தொழிலுக்குச் செல்லாமல் போராட்டத்தில் பங்குபற்றுமாறும் -

மீன் விற்பனைச் சந்தைகளை மூடும்படியும் -

அவர் கோரியுள்ளார்.

மீனவரின் போராட்டத்துக்கு சரியான பதில் கிடைக்காது விட்டால் குடாநாட்டில் உள்ள சகல அமைப்புக்களும் மீனவர்களின் போராட்டத்தில் இணைந்துகொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-3-10-ரி)

### கருத்தரங்கு

திருகோணமலை,ஜூன்4

வடக்கு - கிழக்கு மாகாண உயர் மட்ட அதிகாரிகளுக்கான கருத்தரங்கு ஒன்று, இன்று காலைமுதல் மாகாண சுகாதாரத் திணைக்கள கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மாகாண முகாமைத்துவ பயிற்சித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இக்கருத்தரங்கில் 'புவியியல் தகவல் ஒழுங்கு' பற்றியும் 'செய்மதி தொலை உணர்வு தொழில் நுட்பமும் அதன் பாவனையும்' என்பது பற்றியும் விளக்கம் அளிக்கப்படவிருக்கிறது. (ம-3)

### தாய்லாந்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாந்தைத் தகவல் சேகரிப்பு மையமாகவும், தமது வேறு செயற்பாடுகளுக்கும் பயன்படுத்துவது தொடர்பான போதிய ஆதாரம் எம்மிடம் உள்ளது. இந்த விடயம் தாய்லாந்து அரசுக்கு தெரிந்திருந்த போதிலும் அது இவ்விடயம் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் இத்தகைய செயற்பாடுகள் எதிர்காலத்தில் தாய்லாந்து அரசுக்கு அழுத்தங்களைத் தோற்றுவிக்கும் ... பேச்சுக்கள் இடம்பெற அந்த அரசு இடமளிக்கக்கூடாது என்றார் அவர். (ம-12-4)

### வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளது.

சீனத் தூதுக் குழுவுடன் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நடத்திய பேச்சுக்களின்போது வடக்கு - கிழக்கில் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட சீனா இணக்கம் தெரிவித்துள்ளது.

ஆழ்கடல் மீன்பிடித்தல், பாரிய சீன விடுதி அமைத்தல், சுயதொழில்களை ஆரம்பிக்க ஆலோசனை வழங்கல் போன்ற விடயங்களில் சீனா அக்கறை காட்டியுள்ளது.

ஆழ்கடலில் மீன்பிடிக்க சீனாவை அனுமதிப்பது குறித்து அமைச்சர் மகேஸ்வரன் பிரதமருடன் நேற்றுக் கலந்துரையாடினார்.

ஆழ்கடல் மீன்பிடித்தலில் சீனா ஈடுபட அனுமதிப்பது என்றும் -

இதற்குத் தேவையான றோலர், வலைகளை தீர்வையற்ற முறையில் எடுத்துச்செல்ல அனுமதி வழங்குவது என்றும் -

பிரதமர் உறுதியளித்துள்ளார்.

இதுவிடயமாக சீன அதிகாரிகள் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி அவர்களின் விருப்பத்தை அறியவிருக்கின்றனர்.

சகல வசதிகளும் கொண்ட சீனத் தயாரிப்பு உணவுகளை பரிமாறக் கூடிய விடுதியொன்றை நகரின் மத்தியில் அமைக்க சீனா திட்டமிட்டுள்ளது என்றும் -

குடாநாட்டில் குடிசைக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய உதவிகளை வழங்கவுள்ளது என்றும் - அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார். (ம-3)

# மடவளை படுகொலைகள் வழக்கு 3 நீதிபதிகள் முன் விசாரணை

## சந்தேகநபர்கள் தொடர்ந்து விளக்க மறியலில்

கண்டி,ஜூன்4

மடவளை முஸ்லிம் இளைஞர்களின் படுகொலைகள் தொடர்பான விசாரணை மூன்று நீதிபதிகள் முன்னிலையில் ட்ரயல் அட்பார் முறையில் நடைபெறவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அரச தரப்பு சட்டத்தரணி அசேல வெங்கப்புலி நேற்று தெல்தெனிய நீதிவான் இனோகா ரணசிங்க முன்னிலையில் இதனைத் தெரிவித்தார்.

படுகொலைகள் தொடர்பான விசாரணை தெல்தெனிய நீதிவான் முன்னிலையில் நேற்று மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை அவரது புதல்வர்களான லொஹான், சானுக்க உட்பட 18 சந்தேக நபர்களும நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தனர்.

இந்த வழக்கு விசாரணைகள் பெரும்பாலும் நிறைவு பெற்றிருப்பதால சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு ஏற்ப ட்ரயல் அட்பார் முறையில் விசாரணை செய்யப்பட இருப்பதாகவும் விசாரணைக்கு மூன்று நீதிபதிகளின் பெயர்களைச் சிபார்சு செய்ய பிரதம நீதியரசரிடம் ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அரச தரப்பு சட்டத்தரணி மேலும் தெரிவித்தார்.

அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தில் இருந்து பெறப்பட வேண்டிய அறிக்கை, நீதிமன்றத்திற்கு கிடைக்க திணைக்களத்தை வேண்டுமாறு அவர் நீதிவானிடம் கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில் 17 சந்தேகநபர்களும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன் மேல் விசாரணையை நீதிவான் இம்மாதம் 14ஆம திகதிக்கு ஒத்திவைத்தார். (ம)

### யாழ். நிலைமைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோப்பாய் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராஜா, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், டாக்டர் வை. தயாபராஜா, யாழ.வலயக கல்விப் பணிப்பாளா தருமதி செ.மகாலிங்கம், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மற்றும் கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய உலக வங்கியின் உப தலைவர், குடாநாட்டிலுள்ள மாணவர்களின் வாண்மை விருத்திக்கு உலக வங்கி உதவத் தயாராக இருப்பதாகத் தெரிவித்ததுடன் இங்குள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிக் கவனத்தில் எடுத்துக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் 3ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பாக கல்வி அமைச்சுக்கும், மாகாணக் கல்வி அமைச்சுக்கும் மீண்டும் ஒரு தடவை உலக வங்கி சிபாரிசு செய்ய வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் மகஜர் ஒன்றும் உலக வங்கிக் குழுவிடம் கையளிக்கப்பட்டது.

பின்னர் யாழ்.ஆயர் இல்லத்துக்கு சென்ற குழுவினர் ஆயர் அதி.வண தோமஸ் சௌந்தரநாயகத்தையும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவின் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அங்கு உரையாற்றிய உலக வங்கி உப தலைவி, நாட்டில் நிரந்தரமான அமைதி ஏற்படும் வரை பெரிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது சாத்தியமில்லை, சிறிய அபிவிருத்திப் பணிகளையே மேற்கொள்ள முடியும் - என்று கூறினார்.

இதையடுத்து குழுவினர் சாவகச்சேரி சென்று அங்குள்ள அழிவுகளைப் பார்வையிட்டனர். பின்னர் முகமாலை சோதனை நிலையத்துக்கும் சென்றனர்.

தூதுக்குழுவினருடன் பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழில் நுட்பவியல் அமைச்சர் மிலிந்த மொறகொட, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, சமாதான செயலணிச் செயலர் பேர்னாட் குணதிலக ஆகியோரும் வந்திருந்தனர்.

(ம-3-10-8)

### அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிரலும் இந்தப் பேச்சின்போது தயாரிக்கப்படலாம் என்றும் தெரியவருகிறது.

அரச தூதுக்குழு சில வாரங்களுக்கு முன்னர் முதல் தடவையாக வன்னி சென்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியது தெரிந்ததே (ம)


ஒருவர் உரையாடுவது உங்கள் காதுகளுக்குக் கேட்கவில்லையா?
இதோ! தெளிவாகக் கேட்பதற்கான
**காது கேட்கும் கருவி**
(கியறிங் எயிட்)
சகல மாதிரிகளிலும் யாழ். மண்ணில் விற்பனைக்கு வந்துவிட்டது!
வெளிநாடுகளிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்து கொழும்பு விலையிலும் பார்க்கக் குறைவான விலையிலும் ஒரு வருடகால உத்தரவாதத்துடனும் தொடர்ச்சியான பராமரிப்புச் சேவையும் செய்துகொடுக்கப்படும்.
**ENT மெடிக்கல் கிளினிக்**
22, 24, முனீஸ்வரன் வீதி,
(பஸ்நிலைய முன் ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.
குறிப்பு : உங்களிடமுள்ள பழுதான காது கேட்கும் கருவிகளை சிறந்த முறையில் திருத்தியும் தரப்படும்.
(4484)



2004 பிரிவு 2
கணக்கீடு
திரு.பாலவாசன் B.B.A. (Fm.Spl.)
O/Lஇல் கணக்கீட்டு அறிவினைப் பெற்றிராத மாணவர்களுக்கான புதிய பிரிவு
Sat., Sun. → 9-10a.m.
ஆரம்பம்: 08.06.02 → 9.a.m
வீக்னா கல்வி நிறுவனம்
(4479)
பிரிவு 2



**BRIGHTMAN**
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
புதிய பிரிவு
SPOKEN ENGLISH with GRAMMAR
Mon. Wed. 3.00p.m
By: BRITTO
ஆரம்பம்:05.06.2002 Wed.3.00p.m
(4421)



**தேவை**
புதிதாக ஆரம்பிக்கவுள்ள நிறுவனமொன்றுக்கு Computer Hard Ware, Corel Draw, Word தெரிந்த பெண் தேவை.
சுயவிவரத்துடன் தொடர்புகொள்ளவும்.
51, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி அருகாக)
(C/22386)



**வீக்னா கல்வி நிறுவனம்**
O/L DAY CLASS 8.30 - 2.00
பழைய பாடத்திட்டத்திற்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
புதிய பாடத்திட்டத்திற்கான புதிய பிரிவு ஆரம்பமாகவுள்ளது. அனுமதிகள் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.
(4394)


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை பஞ்சலிங்கம்

**(ஓய்வுபெற்ற கணக்காளர், Alpha Industries-கொழும்பு)**

உடுவில் லவ் லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பஞ்சலிங்கம் 01.06.2002 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் சிவப்பிரகாசம் - காலஞ்சென்ற கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும் கேதாரகௌரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற புத்திரலிங்கம், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச சகோதரரும் றமணன் (கனடா), அகிலா (கனடா), உத்தமி (Union International Accessories, கொழும்பு), குந்தவி (வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ருபிச்சந்திரனின் (கனடா) மாமனாரும் அசோகனின் (G.T.Z.) மைத்துனரும் திருமதி தி.சுகிர்தரத்தினம் (கனடா), குமாரதாசன் ஆகியோரின் மருமகனும் காயத்ரி (பிரதேச சபை, சுன்னாகம்), தாட்சாயணி, மாதினி, கோகுலன் ஆகியோரின் மாமாவும் வாகீசனின் (கனடா) பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2002) புதன்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*லவ் லேன்,*
*உடுவில்.*

(C/22392)

தகவல்:
க.அசோகன் (மைத்துனர்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.06.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.